மலர்-5 இதழ்-125 நவம்பர் 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

ஆன்மிகமலர்
mobile app
GET IT ON Google Play

மாதமிருமுறை

e- magazine

www.aanmeegamalar.com



# விலங்குகளுக்குள் இருக்கும் நம்பிக்கை மனிதனிடம் இருப்பதில்லை

# கோபுரமும் மனித உடலும் திருமூலர் கூறும் தெளிவுரை




| | |
|---|---|
| பாதங்கள் | முன்கோபுரம் |
| முழங்கால் | ஆஸ்தான மண்டபம் |
| தொடை | நிருத்த மண்டபம் |
| தொப்புள் | பலி பீடம் |
| மார்பு | மகாமண்டபம் |
| கழுத்து | அர்த்த மண்டபம் |
| சிரம் | கர்ப்பகிரகம் |
| வலது செவி | தஷிணா மூர்த்தி |
| இடது செவி | சண்டேஸ்வரர் |
| வாய் | ஸ்நபன மண்டப வாசல் |
| மூக்கு | ஸ்நபன மண்டபம் |
| புருவ மத்தி | லிங்கம் |
| தலை உச்சி | விமானம் |

கோபுரம் என்பதற்கு இறைவனை நோக்கி ஆன்மாக்கள் செல்லும் வழி எனப் பொருள் கூறுவார். கருவறையின் மேல் உள்ள விமானம் சிரசாகவும், கோபுரம் இறைவனின் திருப்பாதமாகவும் கூறப்படும். திருமூலர் திருமந்திரத்தில் பின்வரும் பாடல் ஒன்றின் மூலம் இறைவனுக்கும் ஆன்மாவிற்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்துகிறார்.

இதனை திருமூலர்:

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்க
கள்ளப் பலனைந்தும் காளாமணி விளக்கே"

– என்று கூறுகிறார்.

# தீபாவளியன்று விளக்கேற்றினால் லட்சுமிகடாட்சம் பெருகும், தீய, சூழ்ச்சி, செய்வினைகள் அகலும்

தீபாவளி நாளில்தான் ராமன், சீதை, லட்சுமணன் தங்கள் வனவாசம் முடித்து, அயோத்தி திரும்பினர். ராமனையும் சீதாவையும் வரவேற்க ஊர் முழுவதும் விளக்கேற்றி புதிய விடியலாக மக்கள் கொண்டாடினர். இதனால் தீபாவளி திருநாளன்று விளக்கேற்றினால் ராமன் சீதா விஜயம் நமது வீடுகளில் நடக்கும் என்பது ஐதீகம்.

மேலும் இதே தீபாவளி நாளன்றுதான் பஞ்சபாண்டவர்கள் தங்களது 13 ஆண்டு வனவாசத்தை முடித்து, பல்வேறு சூழ்ச்சிகள், வஞ்சகங்களையும், வென்று அஸ்தினாபூருக்கு தீபாவளி திருநாளன்று நாடு திரும்பினர். மக்கள் அவர்களை வரவேற்க வீடுகளில் விளக்கேற்றி மிகப் பிரம்மாண்ட வரவேற்பு அளித்து மகிழ்ந்தனர்.

இதனைத்தொடர்ந்து வீடுகளில் மகிழ்ச்சி பொங்கவேண்டும் என்பதாலும், வஞ்சகம், சூழ்ச்சி வென்று குடும்பம் மகிழ்வுடன் இருக்கவேண்டும் என்பதாலும் தீபாவளித் திருநாளில் விளக்கேற்றும் நிகழ்வு கடைபிடிக்கப்பட்டதாகவும் புராணங்கள் வாயிலாக அறியமுடிகிறது.



# தீபாவளியன்று
## சகோதரன் சகோதரி சந்தித்துக் கொண்டால்
# மோட்சத்தை அடையலாம்

தீபாவளி பண்டிகை ஐந்து நாட்கள் கொண்டாடப்பட வேண்டும் என்று பழமையான கதைகளில் கூறப்பட்டுள்ளது. இந்த ஐந்து நாட்களும் மிகவும் விஷேஷ நாட்களாகும்.

அதாவது தீபாவளியின் முதல் நாள் தன்வந்தரி திரியோதாஷி என்று அழைக்கப்படுகிறது. இந்த நாளில், மருத்துவக் கடவுளான தன்வந்தரி, மனிதகுலத்திற்கான ஆயுர்வேத அறிவியலைக் கூறியவர். இவர் கடலில் இருந்து தோன்றியவர். இந்நாளில் இவரை வணங்க வேண்டும்.

தீபாவளியின் இரண்டாவது நாள் நரக சதுர்தாஷி என்று அழைக்கப்படுகிறது.

மூன்றாவது நாள் லட்சுமி பூஜை செய்வார்கள். மகாபலி சக்ரவர்த்தி பூமியில் சிறப்பாக ஆட்சி செய்தாலும் ஒருசில தவறு செய்தார், அதில் முக்கியமானது மகாலட்சுமியை சிறைபிடித்து வைத்திருந்தார், பகவான் கிருஷ்ணர், வாமன அவதாரம் எடுத்து மகாபலியிடமிருந்து இலட்சுமிதேவியை மீட்ட தினம் தீபாவளிதிருநாளில் நடந்ததால் இன்றைய தினம் லட்சுமியை வழிபடுபவர்கள் வீட்டில் லட்சுமி கடாட்சம் பெருகும்.

நான்காவது நாள் கோவர்தன் பூஜை, கிருஷ்ணர் இந்திரனுக்கு பதிலாக மலையானகோவர்த்தன கிரியிடம் பிரார்த்தனை செய்யப் போவதாக பிருந்தாவன மக்களிடம் கூறிய நாள்.

ஐந்தாவது நாள் பாய் தூஜ் என்று கொண்டாடப்படுகிறது, அதாவது சகோதர சகோதரிகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நாளாகும். வேத சகாப்தத்தில், மரணத்திற்கு அதிபதியாக விளங்கும் எமதர்மராஜன், தனது சகோதரி யமுனாவை சந்தித்து ஒரு வரம் அளித்தார்.

தீபாவளித் திருநாளில், எவன் ஒருவன் தன் சகோதரியை சந்திக்கிறானோ அவன் வாழ்வில் செய்த பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுதலைப் பெற்று மோட்சத்தை அடைவான் என்று புராணத்தில் கூறப்பட்டுள்ளது. இதனால் இந்த தினத்தில், சகோதர சகோதரி சந்தித்துக் கொள்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இந்த நிகழ்வை வட இந்தியாவில் மிகவும் பிரம்மாண்டமாக கொண்டாடி மகிழ்கின்றனர். இந்த தினத்தில், சகோதர சகோதரிகள் இனிப்பு, புதிய உடைகளை தங்களுக்குள் பரிமாறிக் கொள்வதை வழக்கமாக கடைபிடித்து வருகின்றனர்.






# மனித வாழ்வு முழுமையடைய

உலகில் உள்ள பிறவிகளில் மனிதப் பிறவி மட்டுமே அந்தரத்தில் தொங்கும் கயிற்றின் மேல் நடப்பதைபோன்ற ஒரு வாய்ப்பினை இறை வன் கொடுத்துள்ளான்.

இந்த கயிற்றை வெற்றிகரமாக தாண்டினால் பிறவியில்லாப் பேறு பெற்றுவிடலாம், கயிற்றை தாண்ட முடியாமல் பாதியில் தத்தளித்தால் மீண் டும் மீண்டும் பிறவி பெற்று உழல வேண்டும்.

இந்த கயிற்றை தாண்டிய பலர் தத்தளிக்கும் மனித இனம் வெற்றிகரமாக பிறவிக் கடலை கடக்க பல யோசனைகளை கூறியுள்ளனர்.

அவை தத்துவமாகவும், சாஸ்திரமாகவும் மட் டுமே நாம் பார்ப்பதால் மனித இனம் பிறவிக் கடலை கடக்க முடியாமல் அவதிப்பட்டுக் கொண் டிருக்கிறது.

குறிப்பாக சொல்ல வேண்டுமானால், எல்லா நேரத்திலும், எல்லா நிகழ்வுகளிலும் மனிதன் மனிதனாக இருப்பது கிடையாது. அதே போன்று மனிதர்கள் எதிர்பார்த்தபடி அனைத்தும் நடந்து விடும் என்று கூறிவிடவும் முடியாது. இதற்கு பெயர்தான் விதி.

நம் கர்ம வினைகளை முடிப்பதற்கே நாம் அனை வரும் பிறவி எடுத்துள்ளோம். வந்த வேலை முடிந்ததும்கிளம்பவேண்டி யது தான். அதற்குத் தான் பெரியவர்கள் சொல்லி வைத்தார்கள், "உலகமே ஒரு நாடக மேடை, அதில் நாமெல் லாம் ஒரு பொம்மை, ஆட்டம் முடிந்ததும் பொம்மையை வைத்து என்ன செய்வது"

இது மனிதனாக பிறந்து வாழ்ந்த மகான் களுக் கும் பொருந்தும், இளம் வயதில் விவேகானந்தருக்கு மரணம் நிகழ்ந்தது, பகவான் என்று போற்றி புகழப்பட்ட ரமண பகவானுக்கு கொடிய நோய் ஏற்பட்டது, அப்பேற்பட்ட மகா பெரியவாளுக்கு கூட உடல் நலப் பிரச்சனை ஏற்பட்டது.

இதுபோன்ற மகான்கள் பூமியில் அவதரித்ததன் நோக்கமே தங்களது பூர்வ விதியை இந்த பூமியில் கழிப்பதற்காகத்தான். இவர்கள் தங்கள் விதியை வென்றவுடன் ஜோதியில் ஐக்கிய மாகிவிடுவார்கள்.

இவர்கள் தங்களை பக்குவப்படுத்திக் கொண்ட விதத்தை மக்களும் கடைபிடித்து இறைவனுடன் ஜோதியில் ஐக்கியமாகிவிட வேண்டும்என்பதால் தான் பல்வேறு அறிவுரைகளை கூறிச் சென்றுள் ளனர், பாதை தெரியாமல் விழிப்பவனுக்கு, சரியான பாதையில் சென்று வெற்றிகரமாக திரும்பியவன் வழிகாட்டினால் அவசியம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மனித வாழ்வு என்பது நம் மண்ணில் வந்து திரும்பவதற்கான ஒருவழி பாதை. இதில் ஜனனம் மரணம் ஒரு இயற்கை விதி. இருக்கும் போது உள்ளங்களை மகிழ செய்தோம் என்பது மட்டுமே நம் குறிக்கோளாக இருக்க வேண்டும். நாம் அனைவரும் தினந்தோறும் எவ்வளவோ குறைகளுடன்தான் கழிக்கிறோம், அவசியம் அவற்றை எல்லாம் ஒவ்வொன்றாக களைய முற் படவேண்டும்.

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், ஒருவருக்கு கோபம் அதிகமாக வரும் என்றால், நாளை முதல்






கீதா–ராஜன்

நாம் ஒரு சபதம் ஏற்போம், இன்று ஒரு நாள்: என் மனைவி மக்களிடம் கோப படமாட்டேன், என் சுற்றத்தாரிடம் கோப பட மாட்டேன், என் அலுவலக பணியாளர்களிடம் கோப பட மாட்டேன். என்று ஒரு விரதத்தை மேற்கொள்ளலாம். ஒருமுறை கோபப்பட்டால் சட்டைப்பையில் ஒரு சிறு கல்லை எடுத்து வைத்து கொள்ளலாம்.



தொடர்ந்து இதுபோன்று ஒவ்வொரு முறையும் கோபப்படும் போதும், ஒரு கல்லை நாம் சுமக்க வேண்டும். ஒரு கட்டத்தில் நமது சட்டைப்பை நிறையும் போது அந்த சுமையை நாம் சுமக்க வெகுவாக சிரமப் படுவோம், அந்த சமயத்தில், அக் கற்களை எண்ணிப்பார்த்தால் நாம் எவ்வளவுமுறை நமது விரதத்திலிருந்து நழுவியிருக்கிறோம் என்பது புரியும்.

இதுபோன்றுதான் நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் நமக்கு தெரியாமலேயே விதியில் ஒவ்வொரு சிறு கற்களாக சேர்ந்து கடைசியில் ஒரு பெரும் பாறையாக உருமாறி அடுத்தடுத்த பிறவிகளில்நாம் அதைசுமக்கவேண்டியிருக்கிறது.

ஒரு மனிதனின் ஆயுள்காலம் அதிகப்பட்சமாக 75 வயது என்றால் 27,375 நாட்கள், 100 வயது என்றால் 36,500 நாட்கள் மட்டுமே இந்த பூமியில் வாழ முடியும், அப்படி இருக்கும்போது, பணம், பெண், பொன் என்று அதிதமாக ஆசைப்பட்டு, அந்த ஆசையை நிறைவேற்ற பல்வேறு முயற்சி எடுத்து, அதனால் பலருக்கு பல்வேறு வகையில் துன்பங்களை இழைத்து, கண்ணுக்குத் தெரியாமல் அதிகப்படியான கற்களை சேகரித்து வைத்துக் கொண்டிருக்கிறோம் என்பதே நிதர்சனமான உண்மை யாகும்.

பத்து தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிட பொருளைச் சேர்த்து வைத்தவன் கூட, ஒரு நிமிடம் சிந்தித்து பார்த்தால், அதை முழுவதும் அவனால் அனுபவிக்க முடியாத விரக்தியில் மனதளவில் உழல்வான்.

உண்மையில் இவையெல்லாம் சொத்து அல்ல, மனிதனின் இரத்தத்தின் சூடு குறையும்போது, வாழ்வில் ஒரு வெறுமை தோன்றும்போது இறைவன் நினைப்பு தோன்றும்.

வாழும் இந்த காலத்தில் இறைவனையும், நற்பண்புகளையும் உள்ளத்தில் வைத்து வாழப் பழக ஆரம்பித்தாலே மனித வாழ்வு முழுமையடையும்.

– கீதாராஜன்
சென்னை, போன் 9444228203

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்



## சித்த மருத்துவத்தில் அதிகம் பயன்படுத்தப்படும்

# திருநீற்றுபச்சிலை

இது துளசி இனத்தைச் சேர்ந்த ஒரு தெய்வீக மூலிகை. மாந்திரீகத்தில் இதன் இலைகள் பூஜை அலங்கார வேலைகளுக்கு பயன் படுகிறது, வேர் தெய்வ வசிய வேலைகளுக்கு பயன்படுகிறது. வெண்மை நிறத்தில் அதிகளவு பூக்களை உற்பத்தி செய்யும் இந்தச் செடி இருக்கும் இடங்களை தேடி தேனீக்கள் ஓடிவரும்.

இதில் பீட்டா கரோட்டீன் மற்றும் வைட்டமின் ஏ சத்தும் இதில் அதிகம் காணப்படுகிறது.

குறைந்த கலோரிகளைக் கொண்டுள்ள இந்த திருநீற்றுப் பச்சிலையில், பொட்டாசியம், மாங்கனீசு, கால்சியம் போன்ற தாது உப்புகள் இருக்கின்றன. இவற்றை தவிர, சிட்ரால், சிட்ரோனெல்லால், ஜெரானியால், மெத்தில் சின்னமேட், லிமோனின், மென்த்தால், ஐசோகுவர், செட்ரின், காம்ஃபெரால் போன்ற வேதிப் பொருட்களும் அடங்கியிருக்கின்றன.

இதனால் இந்த மூலிகை ஆண்டி







ஆக்ஸிடெண்டாக செயல்பட்டு நோய்க் கிருமிகளை அழிக்கிறது. இந்த மூலிகை பல நோய்களை குணப்படுத்துகிறது.

இதன் வேர் வெப்பத்தை உண்டாக்கி வயிற்றிலுள்ள வாயுவை அகற்றி வியர்வையை அகற்றும் பணியினை செய்கிறது.

இதன் விதை வழுவழுப்புத் தன்மையோடு உடலிலுள்ள வெப்பத்தைக் குறைத்துச் சிறுநீரைப் பெருக்கும் செய்கை உடையது.

சித்த மருத்துவத்தில் லேகியங்களிலும் தைலங்களிலும் மணத்திற்காக இதனைப் பயன்படுத்துகிறார்கள். பச்சை இலைகள் இருமல், சளி, உபாதைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. சமையலுக்குப் பயன் படுத்தப்படுகிறது, பசியைத்தூண்டுவதறுகும் உறக்கம் உண்டாக்குவதற்கும் உதவகிறது.

வேர் காயங்களைப் போக்கப் பயன்படுகிறது. இதன் எண்ணெய் பூச்சிக்கொல்லியாகப் பயன் படுகிறது.

காது வலி, காதில் சீழ் வடிதல் முதலிய

நோய்களுக்கு இதன் இலையைப் பிழிந்து சாறு எடுத்து இரண்டு முதல் மூன்று துளி காதில் விட்டு வர காது வலி குறையும்.

முகப்பருக்கள் உடையவர்கள் திருநீற்றுப் பச்சிலைச் சாற்றுடன் வசம்புப் பொடியையும் குழைத்து பூசி வர முகப்பரு விரைவில் மறையும்.

படை முதலிய சரும நோய்களுக்கு இதன் இலைச் சாற்றை நோய்கண்ட இடத்தில் பூசிவர அவை எளிதில் மறையும். நாட்பட்ட வாந்தியால் துன்பப்படுபவர்கள் திருநீற்றுப் பச்சிலைச் சாற்று டன் வெந்நீர் கலந்து அருந்தி வர வாந்தி குறையும்.

தேள் கடித்த பின் உண்டாகும் வலிக்கு திரு நீற்றுப்பச்சிலைச் சாற்றை கடிவாயின் மீது பூச வேண்டும்.

திருநீற்றுப் பச்சிலைச் சாற்றுடன் சம அளவு பால் கலந்து காலை, மாலை என இரு வேளை 100 மி.லி.வீதம் அருந்தி வந்தால் வெட்டை நோய்கள், மேக சம்பந்தமான நோய்கள், பீனி சம், நாட்பட்ட கழிச்சல், உள் மூலம், சிறுநீரக சம்பந்தமான நோய்கள் முதலியவை குணமாகும்.

இதன் விதைகள் சர்பத்தில் போட்டு அருந்தும் பழக்கம் உள்ளது. இவை சிறந்த மணமூட்டியாகச் செயல்படுகிறது. இது ஆண்மையைப் பெருக்கும். திருநீற்றுப் பச்சிலையானது பிரசவத்தின் போது ஏற்படும் வலியைக் குறைக்கும்.

ஒரு சிலருக்கு கண் இரப்பையில் கட்டி ஏற்பட்டு வேதனை கொடுக்கும். இந்த சமயம், திருநீற்றுப் பச்சிலையைக் கொண்டு வந்து, கையினால் கசக்கினால் சாறு வரும். அந்தச் சாற்றை கட்டியின் மேல் கனமாகப் பூசிவிட வேண்டும். சாறு காய்ந்த பின் பழையபடி அதன் மேலேயே சாற்றைப் பூசி வர வேண்டும். இந்த விதமாகத் தொடர்ந்து பூசி வந்தால் கண் கட்டி பெரியதாகக் கிளம்பாமல் அமுக்கி விடும்.

சில சமயம் பெரிதாகி தானே உடைந்து சீழும் இரத்தமும் வெளியே வரும். சீழும் இரத்தமும் முழுவதும் வெளியே வந்த பின் சுத்தம் செய்து விட்டு, இந்தச் சாற்றையே போட்டு வந்தால் புண் ஆறிவிடும்.


aanmeegamalar.com வழங்கும்

# தினம் ஒரு திருக்குறள்



ஆன்மிகமலர்.காம் இணையதளம் சார்பில் தினமும் ஒரு திருக்குறளை வாட்சப்பில் பெற விரும்புபவர்கள் 9444228203 என்ற வாட்சப் எண்ணிற்கு Thirukkural என டைப் செய்து அனுப்பிவையுங்கள்.

aanmeegamalar.com - whatsapp குருப்பில் இணைந்து தினமும் ஒரு அழகிய வடிவமைப்புடன் கூடிய திருக்குறளை பெறுங்கள்




# பழமைவாய்ந்த திருக்கழுக்குன்றம் மானாமதி அகரம் ஸ்ரீ கைலாசநாதர் ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி ஆலயம்



வேலன்

திருக்கழுக்குன்றம் திருப்போரூர் சாலையில் மானாமதிக்கு அடுத்து அமைந்துள்ளது அகரம் கிராமம். செங்கல்பட்டு மாவட்டம் மானாமதி உள் வட்டத்தில் அமைந்துள்ள இந்த அகரமானது மானாமதியின் ஒரு பகுதியாக சோழர் காலத்தில் இருந்துள்ளது.

அகரம் ஸ்ரீகைலாசநாதர் கோயில் கிபி. 8 ஆம் நூற்றாண்டை சார்ந்தது. பல்லவர்கால சூரியனார் சிற்பம் இங்கு அமைந்துள்ளது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து ஆமூர் கொட்டத்துக் குமிழி நாட்டில் அகரம் இருந்துள்ளது.

முதலாம் இராசேந்திரனுடைய எட்டாம்ஆட்சி யான கி.பி.1020–ல் வானமங்கை என்ற பெய ரில் அகரம் இருந்துள்ளது. இங்கு 4000 பிராமணர்கள் குடியமரத்தப்பட்டனர். செங் கோல்வளவன், பொன்னிநாடன். பூம்புகார் என்ற காவேரிப்பட்டினத் தலைவன், இமயத்தில் புலிக் கொடி பொறித்தவன் என்றெல்லாம் மன்னன் போற்றப்படுகின்றான்.

வானமங்கை என்பது வானவன் தேவியின் கூப்பிடும் பெயராகும். இவர் இராசேந்திரனின் தாயார். உற்சவ மூர்த்தி ஆதிரை விடங்கர் என்றும் ஒரு நிலத்தின் பெயர் ஆதிரை விளாகம் என்றும் அழைக்கப்பட்டுள்ளது. வானவன் மாதேவி என்ற ஊரில் தீபத்தரையன் என்பவனால் திருக்கயிலாய கோயில் கட்டப்பட்டது.

இவர் இரேந்திரனின் கீழ் பணி புரிந்தவர். முதலாம் குலோத்துங்கனின் 40 ஆவது ஆட்சி யாண்டில் கிபி–1110 கழனிவயல் என்ற ஊரைச் சேர்ந்தவன் வானவன்மாதேவி சதுர்வேதிமங்க லத்து இறைவனுக்கு நன்கொடை அளித்துள் ளான். கி.பி.1402–ல் கைலாசமூலை அகரத்தில் இருந்த கைலாசமுடையார் கோயில் திருப் பணி செய்யப்பட்டுள்ளது.

வேங்கட தேவராயரின் ஆட்சியின்போது செய்யூர் கந்தசாமி கோயிலுக்கு திருக்கழுக்குன்றப் பற்று பனை மூலை சீர்மையாகிய கைலாசமூலை என்ற அகரம்தானமாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த ஊரில் 6 கல்வெட்டுக்கள் கண்டு எடுக்கப் பட்டுள்ளன.

### ஆலய விவரம்:

திருக்கழுக்குன்றதிலிருந்து திருப்போரூர்செல் லும் சாலையில் மானாமதிக்கு அடுத்துஅமைந் துள்ளது இந்த அகரம் கோயில். திருக்கழுக் குன்றதிலிருந்து செல்கையில் மானாமதியை அடுத்து 2 கிலோமீட்டர் தூரம் சென்றதும் வலது கை பக்கம் கோயிலின் குளமும் இடதுகைபக்கம் கோயிலும் அமைந்துள்ளது. கோயில் கிழக்கு




பக்கம் பார்த்த வாசல் கோயிலுக்கு கோபுரம் இல்லை பெரிய கிரில் கதவு உள்ளது.

பெரிய நந்தி இறைவனை பார்த்தவாறு அமைந்துள்ளது. துவரபாலகர் சிற்பம் அமைந்துள்ளது. வாசலுக்கும் கருவறைக்கும் நீண்ட தூரம் உள்ளது. கருவறை வாசலுக்கு முன் வினாயகர் – முருகன் வள்ளிதெய்வானையுடன் காட்சியளிக்கின்றார். சூரியனார் சிற்பம் வழக்கமாக இறைவனை பார்த்தவாறு இருக்கும்.

இங்கு கிழக்குபக்கம் பார்த்தவாறு உள்ளது. இறைவன் பெயர் ஸ்ரீகைலாசநாதர். பெரிய அமைப்புடன் பிரம்மாண்டாக அமைந்துள்ளார்.

அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் மாணிக்க வாசகர் சிலைகள் கோயிலுக்குள் அமைந்துள் ளது. கோயிலுக்கு உள்ளேயே பைரவர் சிலையும் உள்ளது. அதன் எதிரிலேயே நவக்கிரகங்கள் அமைந்துள்ளது.

கோயிலினை சுற்றி வருகையில் கோயில் சுவற்றில் ஸ்ரீசெல்வ வினாயகர், தட்சிணாமூர்த்தி. விஷ்ணு, பிரம்மா, துர்கை சிலைகள் அமைந்துள்ளது. இங்குள்ள தட்சணாமூர்த்திசிலையை நாக தட்சணாமூர்த்தி என சிலர் குறிப்பிடுகின்றனர். வெளியே தனியாக அம்மன் சன்னதி அமைந்துள்ளது.

அம்மன் பெயர் ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி. நின்ற கோலத்தில் அம்மன் நமக்கு காட்சியளிக்கின்றார். கோயிலின் சுவற்றில் கிழக்கு பக்கம் பார்த்தவாறு மீன் சிற்பம் வடித்துள்ளார்கள். சில சிலைகள் கோயிலின் உள்ளே வைத்துள்ளார்கள். கோயில் கட்டுமான பணி நடந்துவருகின்றது.

கட்டுமான பணி முடிந்ததும் சிலைகளை அமைப்பார்கள் என நினைக்கின்றேன். கோயிலினை சுற்றி நிறைய இடங்கள் காலியாக உள்ளன. நந்தவனமும் மரங்களும் வைத்தால் சுற்று சூழல் அருமையாக இருக்கும். பிரதோஷம். பௌர்ணமி. சிவராத்திரி






போன்ற சிவனுக்கு உகந்த நாட்களில் இங்கு விஷேஷமாக பூஜைகள் நடைபெறுகின்றது.

ஆலய தொடர்புக்கு: 9940872125 நேரம் கிடைக்கும் சமயம் ஆலயத்திற்கு சென்று வாருங்கள். அமைதியான சூழல் மனதுக்கு அமைதி கிடைக்கின்றது.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

# எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

aanmeegamalar@gmail.com



# தில்லை

## தேவாரப் பாடல்பெற்ற சிவபுரங்களில் 1-வது திருக்கோவில் சைவர்களுக்கு கோவில் என்று அறியப்படும் தலம்.

இந்த நடராசர் கோவில் அமைந்துள்ள இடமானது உலகின் பூமத்திய ரேகையின் மையைப் பகுதி என்று சொல்லப்படுகிறது.

உலக காந்த ஈர்ப்பு விசையின் மையத்தில் தான் இந்த சிதம்பரம் நடராசர் கோவில் அமைத் திருக்கிறது.

அமைவிடம்: கடலூர் மாவட்டம் சென்னையில் இருந்து ரயில் மற்றும் சாலை மார்க்கமாக சிதம்பரம் சென்று அடையலாம். சென்னையில் இருந்து சுமார் 240 கி.மி. தொலைவில் சிதம்பரம் இருக்கிறது. காவிரியின் வடகரை சிவஸ்தலங்களை தரிசிக்க சிதம்பரத்தை ஒரு நுழைவாயில் என்று கூட சொல்லலாம்.

சங்க இலக்கியமான கலித் தொகையின் முதல் பாடல் சிதம்பரம் நடராசர் துதியாக உள்ளது. எனவே சங்க காலத்துக்கு முன்பே சிதம்பரம் தலம் புகழ் பெற்றிருந்தது. ஒவ்வொரு கோவிலுக்கும் ஒரு தல புராணத்தை சிறப்பாக சொல்வார்கள். சிதம்பரம் கோவிலுக்கு புலியூர் புராணம், கோவில் புராணம், சிதம்பரப் புராணம் என்று மூன்று தல புராணங்கள் உள்ளன. நடராசர் கோவிலும், தில்லையம்மன் கோவிலும், இளமையாக்கினார் கோவிலும், திருச்சித்திரக்கூடமும் இங்கு இருப்பதால், இது கோவில் நகரம் என்றும் அழைக்கப்படுகிறது.

❖ அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என நால்வராலும் பாடப் பெற்ற தலம் இது.

❖ மாணிக்கவாசகர் முக்தி பெற்ற தலம் இது.

❖ பூலோக கைலாசம் என்றும் கைலாயம் என்றும் அறியப்பெறுகிறது.

❖ நந்தனார், கணம்புல்லர், திருநீலச் கண்டக்குயவர் ஆகியோரும் தில்லையில் முக்தி பெற்றனர்.

❖ மனித உடலை அடிப்படையாக கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் சிதம்பரம் கோயிலில் 9 நுழைவு வாயில்களும், மனித உடலில் இருக்கும் 9 வாயில்களை குறிகின்றது.

❖ திருநீலகண்ட நாயனார் அவதரித்து வாழ்ந்த பதி இதுதான்.

❖ மூவர் பாடிய தேவாரம் திருவோலைச்சுவடிகள் கண்டெடுக்கப்பட்ட இது.

❖ அம்பாள் இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியா சக்தியாக்க் காட்சி தரும் தலம்.

❖ நடு இரவுக்குப் பின் அனைத்து லிங்கங்களின் சக்தியும் வந்து சேரும் திருமூலட்டானத் தலம்.

❖ நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு இந்த தேவார பாடல்



களை தொகுத்தார் திருமுறை கண்ட சோழ மன்னன்.

- இத்தலத்தில் மாணிக்கவாசகர் இலங்கையை சேர்ந்த புத்த மதத்தை பின்பற்றும் மன்னன் ஒருவனின் ஊமை மகளை நடராசரின் அருளால் பேச வைத்து அதிசயம் புரிந்தார்.
- "நிருத்த சபை" ஊர்த்தவ தாண்டவம் செய்தருளிய இடம் இதுவே.
- திருஞானசம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணங்களாகக் கண்டது இப்பதியில் தான்.
- நடராசர் திருமுன் அருகிலேயே 108 திவ்ய தேசங்களில் ஒன்றான கோவிந்தராஜப்பெருமாள் தலம் இருப்பது விசேஷத்திலும் விசேஷம்.
- இவ்வாலயத்தில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் எனப்படும் ஆயிரம் தூண்கள் கொண்ட மண்டபம், சிற்பக்கலைக்கும், கட்டடக் கலைக்கும் பெயர் பெற்றது. இதை நிபுணர்கள் கட்டடக்கலையின் அற்புதம் என்று புகழ்கின்றனர்.
- இறைவன் விராட்புருஷனின் வடிவத்தில் திருவாரூர் மூலாதாரமாகவும், திருவானைக்கா 'உந்தி 'யாகவும், திருவண்ணாமலை 'மணிபூரக' மாகவும், திருக்காளத்தி 'கழுத்தாகவும்', காசி 'புருவமத்தி'யாகவும், சிதம்பரம் 'இருதயஸ்தான' மாகவும், சொல்லப்படும் தலம்.
- பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத்தலம்
- தரிசிக்க முக்தி தரும் தலம்
- பஞ்ச சபைகளில் பொற்சபையாக விளங்கும் தலம் சிற்றம்பலம்
- சிவன் மீது கொண்ட பக்தியால் நந்தனார் கோவிலுக்குள் சென்று, நடராசருடன் ஐக்கியமானார்.
- மூலவருக்கு அபிஷேக ஆராதனை நிகழும் போது அவற்றை ஆகாயத்திற்கும் காண்பிக்கின்றனர்
- நடராசர் அமைந்துள்ள கருவறைக்கு மேல் புறத்தில் கிட்டத்தட்ட 21,600 தங்க ஓடுகள் இருக்கின்றது. மேலும் 65,000 தங்க ஆணிகளில் பதிக்கப்பட்டுள்ளது.
- 21,600 தங்க ஓடுகளானது சராசரியா மனித னின் ஒரு நாளைக்கு விடுகின்ற மூச்சியின் அளவை குறிக்கின்றது. அதாவது இரு நிமிடத்திற்கு 15 என்றால் 15*60*24 என்ற விதத்தில் கணக்கிடப்பட்டு 21,600 தங்க ஓடுகள் பதிக்கப்பட்டுள்ளது.65,000 ஆணிகள் என்பது மனித உடம்பில் உள்ள நாடிகளின் எண்ணிக்கையை குறிக்கிறது.

**இறைவன் திருப்பெயர்:**

| திருமூலநாதர் (மூலட்டனேஸ்வரர்) | பொன்னம்பலகூத்தர் |
|---|---|
| சபாநாயகர் | கூத்தப்பெருமாள் |
| விடங்கர் | மேருவிடங்கர் |
| தில்லைவனநாதர் | தில்லைநாயகர் |
| தில்லைவாசர் | கனகசபை |
| கனகசபாபதி | கனகரத்னம் |
| சபாரத்னம் | சபேசர் |
| அம்பலநாதர் | அம்பலவாணர் |
| அம்பலத்தரசர் | ஆடலரசர் |
| ஆடியபாதம் | கொஞ்சிதபாதம் |
| நடனசிவம் | நடனசபாபதி |
| நடராசர் | நடேசமூர்த்தி |
| நடேஸ்வரர் | தாண்டவமூர்த்தி |
| தாண்டவராயர் | ஆனந்ததாண்டவர் |
| சிதம்பரநாதர் | சிதம்பரேஸ்வரர் |

**உற்சவர்:** நடராசர் (கனகசபைநாதா)

**இறைவியார்**

**திருப்பெயர்:** உமையாம்பிகை (சிவகாமசுந்தர்)

**கோவில்மரம்:** தில்லைமரம்

**திருக்குளம்:**

சிவகங்கை, பரமானந்த கூபம், வியாக்கிரபாத தீர்த்தம், அனந்த தீர்த்தம், நாகச்சேரி, பிரம தீர்த்தம், சிவப்பிரியை, புலிமேடு, குய்ய தீர்த்தம், திருப்பாற்கடல்.

**வழிபட்டோர்:** அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், நந்தனார், கணம்புல்லர், திருநீலச் கண்டக் குயவர், நம்பியாண்டார் நம்பி,மாத்யந்தினர் எனும் முனிவர், தேவநாயனார் பதஞ்சலி, வியாக்ரபாத முனிவர், ஆதிசங்கரர், அருணகிரிநாதர், திருமூலர், எமன், சித்ரகுப்தன்

**பாமாலை:**அப்பர்,சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர்

தேவாரம் 11 திருப்பதிகங்கள்

திருவாசகம் 25 திருப்பதிகங்கள்

**தல வரலாறு**

தமிழகத்தின் மிக பழமையான



சிவத்திரு.குமரேசன்

கோவில்களில் சிதம்பரம் நடராசர் கோவிலும் ஒன்று. இத்தலத்தில் இறைவனான சிவபெருமான் நடராசராகவும், அம்பாள் உமையாம்பிகை மற்றும் திரிபுரசுந்தரி எனவும் அழைக்கப்படுகின்றனர். இக்கோவிலின் மூலவராக சுயம்பாக தோன்றிய திருமூலநாதர் இருந்தாலும், உற்சவர் நட ராச பெருமானே பிரதான மூர்த்தியாக வழிபடப் படுகிறார்.

சிதம்பரத்துக்குப் பெரும்பற்றப்புலியூர்என்ற பெயர் உண்டு. புலிக்கால் முனிவர் வியாக்கிர பாதர் வழிபட்டதால் இதற்குப் புலியூர் என்று பெயர் வந்தது. அந்தக் கோயிலுக்குச் சிதம்பரம் என்று பெயர். "சித் ஸ்ரீ ஞானம்", "அம் பரம் – ஆகாசம்". சித் + அம்பரம் – சிதம்பரம். காலப் போக்கில் அந்த ஊர் பெயர் மறைந்து கோவில் பெயரே ஊரின் பெயராக மாறிவிட்டது.

## ஆனந்த தாண்டவம்

ஆடல் கடவுள் என்று அழைக்கப்படும் நடராசர் ஒரே இடத்தில் இல்லாமல் ஆடிக்கொண்டே இருக்கிறார்.

1. வலது புற மேல் கையில் உடுக்கையைகொண் டிருப்பது இந்த உலகம் ஒலியின் மூலம்துவங் கியது என்பதைக் குறிப்பதாக நம்பப்படுகிறது.
2. இடது புற மேல் கையில் உள்ள நெருப்புஎந் நேரமும் அழித்து விடுவேன் என்ற எச்சரிக் கையை கொடுக்கின்றது.
3. வலது புற கீழ் கையில் காப்பாற்றுவதைகுறிப் பதை போன்று, பயப்படாதே நான் இருக்கி றேன் என்று கூறுகின்றது.
4. இடதுபுற கீழ் கையால், உயர்த்தி இருக்கும் காலைக் காட்டி, தன்னிடம் அடைக்கலம் புகுவோருக்கும், தன்னை வணங்கும் பக்தர் களுக்கான இடம் என்பதை உணர்த்து கிறது. இந்த நடனத்தில் ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற அணுவின் இயற்பியல் விதியின் அனைத்து செயல்களோடும் ஒத்துப் போகின்றது.

உலகின் பெரிய அணு ஆராய்ச்சி அமைப்பான Geneva வில் உள்ள CERN (European Organi-zation for Nuclear Research,the biggest particle physics laboratory in the world) என்ற இடத்தில், இந்த நடராசர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

சங்க கால தமிழர்கள் கட்டிய சிதம்பரம் கோவில் இப்போது இல்லை. தற்போதுள்ள கோவில் பல்லவ மன்னர்களால் கட்டப்பட்டு, சோழ மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டதாகும். சங்க காலத்துக்கு முன்பு சிதம்பரம் கோவில் கடலோரத்தில் இருந்ததாக பாடல்கள் குறிப்பின் மூலம் தெரிகிறது. முகலாயர்கள், ஆங்கிலேயர்கள் படையெடுப்பின் போது சிதம்பரம் தலம் பல தடவை இடித்து நொறுக்கப்பட்டது. என்றாலும் பழமை சிறப்பு மாறாமல் சிதம்பரம் தலம் மீண்டும் எழுந்தது. சிதம்பரம் தலம் உருவான போது பொன்னம்பலம் எனும் கருவறை தென் திசை நோக்கி இருந்ததாம். பல்லவ மன்னர்கள் புதிய



கோவில் கட்டிய போது அதை வடதிசை நோக்கி அமைத்து விட்டதாக சொல்கிறார்கள்.

சோழ மன்னர்களின் கட்டுமான திறனுக்கு இக்கோவில் ஒரு எடுத்துக்காட்டாகும். பல சோழ மன்னர்கள் எல்லாக்காலங்களிலும் இக் கோவிலை ஆதரித்து வந்துள்ளனர். முதலாம் பராந்தக சோழ மன்னன் 9 ஆம் நூற்றாண்டில் இக்கோவிலின் சிவபெருமானின் திருமுன்னுக்கு "பொன் கூரையை" வேய்ந்தான். பாண்டிய மன்னர்களில் ஒருவரான சுந்தர பாண்டிய மன்னனும் இக்கோவிலின் கிழக்கு கோபுரத்தை கட்டியதாக வரலாறு கூறுகிறது. ராஜேந்திர சோழனின் ஆட்சிக்காலத்தில் "கம்போடியா" நாட்டு அரசன் இக்கோவிலின் இறைவனுக்கு தங்கம் மற்றும் மாணிக்க கற்களை கொண்ட நகைகளை தனது நாட்டு தூதுவர்கள் மூலம் கொடுத்தனுப்பியதாக கல்வெட்டு குறிப்புக்கள் கூறுகின்றன.

முற்காலத்தில் தில்லை மரங்கள் இத்தலத்தில் அதிகம் இருந்ததால் இது தில்லைவனம் என அழைக்கப்பட்டது. இங்கு சிவ பெருமான் நவீன இயற்பியல் அறிஞர்கள் மற்றும் அணு விஞ் ஞானிகள் கூறும் "பிரபஞ்ச நடனம்" ஆடும் நட ராசராக காட்சியளிக்கிறார். இவர் காலின் கட்டை விரலுக்கு அடியில் தான் பூமியின் மையப்புள்ளி இருப்பதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். நாட்டியம் ஆடும் இந்த சிவபெருமானை "ஆடற் கூத்தன்" எனவும் அழைக்கின்றனர். இக்கோவில் தமிழ் நாடு மற்றும் இந்தியாவின் மிகப்பெரிய பரப்பளவு கொண்ட கோவில்களில் ஒன்று.

"பஞ்சபூதங்களில்" சிதம்பரம் நடராசர் கோவில் "ஆகாயத்தை" குறிக்கிறது. இந்த கோவிலின் சிறப்பு அம்சமாக மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூவருக்கும் திருமுன்கள் இருக்கின்றன. இக்கோவிலில் நடராச பெருமான் திருமுன்னுக்கு அருகிலேயே இருக்கும் 108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான கோவிந்தராஜ பெருமாள் திருமுன் சைவ, வைணவ ஒற்றுமைக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

புத்த மதத்தை தழுவிய மன்னன் அசோகன், தன் படை ஒன்றை அனுப்பி, சிதம்பரம் கோவி லை புத்த விகாரமாக மாற்ற முயன்றான். அவர்களை மாணிக்கவாசகர் தன் திறமையால் ஊமையாக்கி சிதம்பரத்தை காப்பாற்றினார். ஒரு தடவை இத்தலத்தில் கொடியேற்றம் நடந்த போது கொடி ஏறாமல் தடைபட்டது. அப்போது உமாபதி சிவாச்சாரியார் என்பவர் கொடிக்கவி என்ற பாடலை பாடினார். அடுத்த நிமிடம் கொடி மரத்தில் தானாகவே ஏறிய அற்புதம் நடந்தது. திருப்பல்லாண்டு பாடிச் சேந்தனார் தடைப்பட்ட தேரை ஓடச் செய்த மந்திரத்தலம்.

முனிவர்களுள் சிறந்தவரான வசிஷ்ட மாமுனிவரின் உறவினரான மத்யந்தினர் என்ற முனிவருக்கு மாத்யந்தினர் என்ற மகன் பிறந்தான். அவனுக்கு ஆன்மஞானம் கிடைக்க வேண்டுமெனில் தில்லை வனக் காட்டில் உள்ள சுயம்பு லிங்கத்தை வணங்குமாறு முனிவர் சொன்னார். இதையடுத்து மாத்யந்தினர் தில்லை வனம் வந்தடைந்தார். இங்குள்ள லிங்கத்தை தினமும் பூசை செய்தார். பூசைக்கு தேவையான மலர்களை, பொழுது விடிந்த பிறகு எடுத்தால் தம் பூசை, தவம் முதலியவற்றிற்கு நேரமாகிறபடியாலும், மலர்களில் உள்ள தேனை வண்டுகள் எடுப்பதால் அம்மலர்கள் பூசைக்கு ஏற்றவையல்ல என்பதாலும் ஒவ்வொரு நாளும் மிகவும் மனம்வருந்திக் கொண்டே மலரெடுத்துப் பூசை செய்து கொண்டு வந்தார். இக்குறையை சுவாமியிடம் முறையிட்டார். சுவாமி தங்கள் பூசைக்காக பொழுது விடியுமுன் மலர்களைப் பறிக்க இருட்டில் மலர்கள் தெரியவில்லை.

பொழுது விடிந்த பின்னர் மலர்களைப் பறிக்கலாம் என்றால் மலர்களில் உள்ள தேனை வண்டுகள் எடுத்துவிடுவதால் பூசைக்கு நல்ல மலர்கள் கிடைக்கவில்லை என்று கூறினார். உடனே சுவாமி மரங்களில் ஏறுவதற்கு வசதியாக வழுக்காமல் இருக்கப் புலியினுடைய கை கால்கள் போன்ற உறுப்புகளும், இருளிலும் நன்றாகத் தெரியும்படியான கண்பார்வையும் உனக்கு கொடுத்தோம் என்று கூறியருளினார். மேலும் புலிக்கால் புலிக்கைகளைப் பெற்றதால் உன் பெயரும் வியாக்கிரபாதன் என்றும் கூறினார். மாத்யந்தினரும் பெருமகிழ்வு கொண்டு தினமும் மனநிறைவோடு பூசை செய்து வந்தார் என தல வரலாற்றுக்குறிப்பு கூறுகிறது.

## படிக்காசு கொடுத்த நடராசர்

தேவநாயனார் என்பவர் நடராசர் மீது ஒரு சித்தாந்த பாடலை பாடி கருவறை முன்புள்ள வெள்ளிப்படிகளில் நூலை வைத்தார். அப்போது படியில் உள்ள ஒரு யானை சிற்பம் உயிர் பெற்று அந்த நூலை எடுத்து நடராசரின் காலடியில் எடுத்து வைத்தது. இந்த அதிசயம் காரணமாக அந்த நூலுக்கு திருக்களிற்றுப்படியார் என்ற பெயர் ஏற்பட்டது. முத்து தாண்டவர் என்ற புலவர் தினமும் சிதம்பரம் கோவிலுக்குள் நுழைந்ததும், முதலில் தன் காதில் எந்த சொல் விழுகிறதோ, அதை வைத்து கீர்த்தனை இயற்றி, பாடி நடராசரை துதித்து வழிப்பட்டார். அவர் பாடி முடித்ததும் தினமும் அவருக்கு நடராசர் படிக்காசு கொடுத்தது ஆச்சரியமானது.

### திருமுறை சொன்ன பிள்ளையார்

சிதம்பரம் கோவிலுக்குள் திருமுறைகள் உள்ளது என்பதை இந்த உலகுக்கு சொன்னவர் பொல்லாப் பிள்ளையார் ஆவார். எனவே விநாயகரை மூத்த நாயனார் என்று அழைக்கின்றனர். சிதம்பரம் தலத்தை நால்வரும் புகழ்ந்து பாடியுள்ளனர். எனவே திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் குரு பூசை பெரிய திருவிழா போல இத்தலத்தில் கொண்டாடப்படுகிறது.

### சிதம்பர ரகசியம்:

சிதம்பரம் தல சிறப்பு சிதம்பரம் என்றாலே அனைவரின் நினைவிற்கு வருவது “சிதம்பர ரகசியம்” என்ற சொல்வழக்காகும். இதன் உண்மையான பொருள் “சித்” எனும் அறிவு “அம்பரம்” எனும் வெட்டவெளியில் கலக்கும் போது நாம் ஒன்றுமில்லாதவர்கள் எனும் வாழ்க்கை தத்து வத்தை விளக்குவதுதான் சிதம்பர ரகசியமாகும். அதனால் தான் இக்கோவிலில் மூலவர் திருமுன்னில் வெட்டவெளியை திரையிட்டு மறைத்து, அதற்கு தீபாராதனை காட்டப்பட்டு, பிறகு திரையை விலக்கி சூனிய தத்து வத்தை பக்தர்களுக்கு காண்பிக் கின்றனர்.



### எமனும் சித்ரகுப்தனும்:

சிவாலயங்களில் கர்ப்பக்கிரக கோஷ்டத்தை சுற்றி தெய்வ உருவங்கள் இருக்கும். சிதம்பரத்தில் அத்தகைய அமைப்பு இல்லை. திருவண்ணாமலை போன்றே எமன், சித்ரகுப்தன் இருவரும் சிதம்பரம் தலத்திலும் வழிபட்டுள்ளனர். இதை உறுதிப்படுத்தும் வகையில் பிரகாரத்தில் எமனுக்கும், சிவகாமி அம்மன் திருமுன் பகுதியில் சித்ரகுப்தனுக்கும் சிலை உள்ளது.

### நால்வர் வந்த வழி:

சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் நால்வர் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் சிதம்பரத்தில் நடராசரைக் காண திருக்கோயிலுக்குள் வந்தார்கள்.

சம்பந்தர் இறைவனையடைய சத்புத்திர மார்க்கத்தைக் கையாண்டவர். அதனால் தென் வாயில் வழியாக நேரே வந்து இறைவனைக் கண்டுகளித்தார்.

நாவுக்கரசர் தாச மார்க்கத்தைப் பின்பற்றியவர். தாச மார்க்கம் என்பது ஆண்டான் அடிமை உறவு. ஆகவே வலது புறமாக (கிழக்கு) வந்து ஏவல் கேட்கும் நோக்கத்துடன் இறைவனைக் கண்டார்.

சுந்தரர் நட்பு முறையில் இறைவனை வழி பட்டவர். அதனால் பின்புறமாக (வடக்கு) வந்து வேண்டியதை உரிமையுடன் பெற்றவர்.

மாணிக்கவாசகர் சன்மார்க்க முறையைக் கடைப்பிடித்தவர். (குரு சீட உறவு). ஆதலால் அருட்சக்தி (மேற்கு) பக்கம் வந்து இறைவனைக் கண்டார்.

### தரிசிக்க முக்தி:

திருவாரூரில் பிறந்தால் முக்தி. காஞ்சியில் வாழ்ந்தால் முக்தி. காசியில் இறந்தால் முக்தி. திருவண்ணாமலையை நினைத்தால் முக்தி. உயிர் போகும் நேரத்தில் நினைக்க அருள்புரிவாய் அருணாச்சலா என அப்பர் கூறியுள்ளார். இதுபோல், வாழ்நாளில் ஒரு தடவையேனும் நடராசரையும், திருமூலநாதரையும் தரிசித்தால் முக்தி கிடைத்து விடும்.

### தேரில் நடராசர்:

இத்தலத்து நடராசரைக் காண உலகமே திரண்டு வருகிறது. ஏராளமான வெளிநாட்டவர்கள் கூட, நடராசரின் சிற்பச் சிறப்பைக் காண வருகின்றனர். அப்படிப்பட்ட அபூர்வ சிலையை, திருவிழா காலத்தில் தேரில் எடுத்து வருகிறார்கள்.

### சிலையின் முன், பின், தீபாராதனை:

ஒருமுறை பிரம்மா யாகம் ஒன்றை நடத்தினார். இதற்காக, தில்லைவாழ் அந்தணர் மூவாயிரம் பேரையும் சத்தியலோகத்துக்கு அழைத்தார். தில்லையிலேயே இருந்து, நடராசரின் திருநடனத்தைக் காண்பதை விட அந்த யாகத்தில் எங்களுக்கு என்ன பலன் கிடைத்து விடப்போகிறது எனக் கூறினர். அப்போது, நடராசர் யாகத்திற்கு செல்லும்படியும், யாகத்தின் முடிவில் அங்கேயே தோன்றுவதாகவும் வாக்களித்தார். அவ்வாறு தோன்றிய கோலத்தை ரத்னசபாபதி என்கின்றனர். இவரது சிலை நடராசர் சிலையின் கீழே உள்ளது. இவருக்கு தினமும் காலையில் 10 11 மணிக்குள் பூசை நடக்கும். சிலையின் முன்புறமும், பின்புறமுமாக இந்த தீபாராதனையைச் செய்வர்.

**மேலும் தகவல்கள் அடுத்த இதழில்....**

– சிவத்திரு.குமரேசன் இராஜசிசிதம்பரம்
உதவிப் பேராசிரியர் SRM கலை மற்றும் அறிவியல் கல்லூரி
919003296221 easanaithedi.in

# சுத்தமான குருபக்தி இருந்தால் குருவை மிஞ்சிய சிஷ்யனாகலாம்

## விலங்குகளுக்குள் இருக்கும் நம்பிக்கை மனிதனிடம் இருப்பதில்லை

இந்து மதத்தில் குருபக்தியை கேலி–கிண்டல் செய்யும் போக்கு அதிகரித்து வருகிறது.

இந்து மதக்கருத்துக்களை கூறிவரும் ஆன்மிக குருமார்கள் மீது, மாற்று மதத்தை சேர்ந்த பலர், பல துறைகளின் மூலமாக வீண் வதந்திகளை பரப்புவதுடன், அந்த குருமார்களை இந்து மதத்தினரே வெறுக்கும் வகையில் அரு வருக்க செயல்களை செய்துவிடுகின்றனர்.

இதுபோன்ற சூழ்ச்சிகளை செய்து ஆன்மிக பெரியவர்கள் மீது ஒருவித நம்பிக்கையற்ற தன்மையை உருவாக்குவதே இந்த கயவர்களின் நோக்கம், இந்த கயமைத்தனத்தை அறியாததால் பல இந்து மக்கள் ஞானிகள், மகான்கள், ஆன்மிக பெரியவர்களை தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கும் மனோ பாவம் பெருகுவதால், பல்வேறு இந்து மத சிந்தனைகள் பரவுவதை மேற்கண்ட குள்ளநரிக்கூட்டம் தடை செய்துவிடுகிறது.

ஆனால் உண்மையில் குரு பக்தி என்பது மிகப்பெரிய வரப்பிரசாதம், இறைவனை எளிதாக அடையும் ஒரு வழிமுறையை குருவின் மூலம் அடைய முடியவில்லையென்றாலும், அவரின் மீதுள்ள நம்பிக்கையின் காரணமாக, இறைவனை அடைந்துவிடலாம்.

இதற்கு புராணங்களில் பல்வேறு சம்பவங்கள் கூறப்பட்டுள்ளது.

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமானால்....

‘‘பக்த விஜய கதை’’ எழுதிய நாபாஜியின் வாழ்வில் நடைபெற்ற குருபக்திக்கான சோதனையை எளிமையாக பார்ப்போம்....

வாழ்வின் ஒவ்வொரு கணமும் சதா கிருஷ்ணரையே துதித்துக் கொண்டு இருந்தார் அக்ராஜி. அவர் மடத்தில் பூஜை முடித்துவிட்டு தியானம் செய்வார். அப்போது கிருஷ்ணர் அவருக்கு காட்சியளிப்பது வழக்கம்.

அவருடைய மடத்தில் அனாதை சிறுவனான நாபாஜி என்பவன் சிறப்பாக சேவை வந்தான். அக்ராஜி அவர்களின் உபதேசத்தைக் கேட்டே அவனும் சிறந்த கிருஷ்ண பக்தனாக மாறி னான். ஒருநாள் குரு அக்ராஜி தியானத்தில் நீண்ட நேரம் அமர்ந்தும் கிருஷ்ணர் தரிசனம் கிட்டவில்லை.

"என் பக்தியில் ஏதோ குறை நேர்ந்து விட்டதோ?" என அக்ராஜி கண் கலங்கினார். அப்போது சிறுவனான நாபாஜி, "குருவே ! தாங்கள் தவறு ஏதும் செய்யவில்லை. கிருஷ்ணரின் பக்தன் ஒருவரின் கப்பல். மூழ்கும் நிலையில் இருந்தது. கப்பல் உரிமையாளர் தன்னுடைய கப்பலை காப்பாற்றி கரை சேர்த்தால் கப்பலில் உள்ள பொக்கிஷத்தில் பாதியை ஏழைகளாக உள்ள கிருஷ்ணரின பக்தர்களுக்கு பகிர்ந்து அளிப்பதாக வேண்டி இருந்தான், அவனைக் காக்க கிருஷ்ணர் சென்று விட்டதால் தான்

தங்களுக்கு தரிசனம் கிடைக் காது போனது" என்று காரணம் சொன்னான்

சிறிது நேரத்தில் மடத்திற்கு வந்த கிருஷ்ணர் தாமதம் ஏற்பட்டதற்கு சி று வ ன் நாபாஜி கூறிய காரணத்தையே தெரிவித்தார். குருவை மிஞ் சிய நாபாஜியை அனைவரும்



பாராட்டினார். "அடியேன் என் குருவிற்கு செய்த சேவையால் தான் இந்நிலையை அடைந்தேன்" என்றான் நாபாஜி. இந்த நாபாஜி எழுதிய நூல் தான் பக்த விஜயக் கதைகள் ஆகும்.

இது முழுக்க உண்மையான குருபக்தியை கடைபிடித்த ஒரு சீடன் இறைவனை எளிதாக அடைந்த வழிமுறையாகும்.

இதைப்போன்று இறைவனைப் பற்றியும், அவனை அடையும் வழிமுறைகளையும் பல்வேறு மகான்கள், ஞானிகள் கூறிச் சென்றுள்ளனர்.

ஆனால், அவர்கள் கூறிச் சென்ற வழி முறைகளை இன்றும் கடைபிடிக்க பல்வேறு தயக்கங்கள் மக்களிடையே நிலவுகிறது.

இதற்கு ஒரு எளிமையான பக்தன் தன் அனுபவப்பூர்வமான செய்தியை பதிவு செய் துள்ளார்.

மகான்கள் மீது நம்பிக்கை அவசியம்

ஆணவம் தலைக்கேறிய ஒருவன், பண்டர் பூருக்கு செல்லும் விட்டல பக்தரிடம் கேட்டார்.

தங்களது வயது என்ன?

**பக்தர்:** 80 ஆண்டுகள்

**ஆணவக்காரன்:** நீங்கள் எவ்வளவு காலமாக இந்த பண்டர்பூருக்கு வருகிறீர்கள்?

**பக்தர்:** 70 வருடங்களாக..

**ஆணவக்காரன்:** பாண்டுரங்கனை நேரடியாக ஒரு முறையாவது பார்த்திருக்கிறீர்களா?

**பக்தர்:** இல்லை மகனே, இன்னும் இல்லை.

**ஆணவக்காரன்:** பிறகு நீங்கள் ஏன் ஒவ்வொரு வருடமும் வருகிறீர்கள், அவர் அங்கே உண்மையாக இருக்கிறார் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

**பக்தர்:**நான் உங்களிடம் ஒரு கேள்வி கேட்கலாமா,நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள்?

**ஆணவக்காரன்:** நான் புனேயிலிருந்து..

**பக்தர்:** புனேவில் மக்கள் வீட்டில் வளர்ப்பு நாய் களை வைத்திருக்கிறார்களா, நீங்கள் பார்த்தீர் களா?

**ஆணவக்காரன்:** ஆம், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நாய் உள்ளது..

**பக்தர்:**எங்கள் கிராமத்திலும் நாங்கள் நாய்களை வளர்க்கிறோம், அது திருடர்களிடமிருந்து பாதுகாக்க பண்ணையை சுற்றி வருகிறது. இரவில் ஒரு நாய் திருடனைப் பார்த்தால், அது குரைக்கத் தொடங்குகிறது.. இந்த நாயின் சத்தத்தை கேட்பதன் மூலம் மற்றொரு நாய் குரைக்கத் தொடங்குகிறது.. சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான நாய்கள் குரைக்கத் தொடங்குகின்றன.. ஆனால் நூறு நாய்களில் 99 திருடனைப் பார்க்கவில்லை, ஆனால் முதல் நாய் மீது அனைத்தும் நம்பிக்கை வைத்து குரைக்கத் தொடங்குகிறது.

அதுபோலவே மிக உயர்ந்த பக்தர்களான துக்காராம் மகராஜ், சாந்த் ஞானேஸ்வர், நாமதேவர், புண்டரிகர், கோராகும்பர் மற்றும் எண்ணற்ற பக்தர்கள் பாண்டுரங்கனை நேரடியாக தரிசனம் பெற்றிருக்கிறார்கள்.. அதனால் அவர்கள் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது.. அவர்களின் வழியை பின்பற்றுகிறேன்.. ஒரு நாள் நானும் பாண்டுரங்கனை தரிசனம் செய்யலாம்.

**விலங்குகள் தங்கள் நம்பிக்கையை இன்னொரு விலங்கின் மீது வைத் திருக்க முடிந்தால், ஒரு மனிதனாக இருக்கும் நாம் ஏன் மற்றொருவரின் மீது நம்பிக்கை வைக்க முடியாது?**

இனி, யாராவது ஒரு மகான், அல்லது இந்து மதத்தைச் சேர்ந்த ஆன்மிக பெரியவர்களைப் பற்றி வீணான புரளி, புகார்கள் வந்தால், உடனடி யாக அந்த ஆன்மிகவாதியை வெறுக்காமல் இதில் உள்ள சூழ்ச்சியை அறிந்து கொள்ள முற்படுவோம்.

இது கலிகாலம் அதனால் இறைவன் கூட அரக்கர்களின் விமர்சனத்துக்கு ஆளாக நேரிடு கிறது.






சமையலுக்கு புதியவரா? சுவையான சமையல் சமைக்க விரும்புகிறீர்களா? கவலையே வேண்டாம், கீதாசமையல் YouTube சேனலை பாருங்கள் புதிய மற்றும் பாரம்பரிய சமையல் குறிப்புகளை அறிந்து கொண்டு வீட்டிலேயே சுவையான சமையலை செய்து மகிழுங்கள்




ஓட்டல் சுவையில் புதிய உணவுகளை சமைக்க தொடர்ந்து நமது YouTube சேனலை பாருங்கள்

பாரம்பரியமான சமையல் குறிப்புகளை மிக எளிதாக, தெளிவாக அறிந்து கொள்ள (geetha samayal) youtube சேனலை பாருங்கள்

YouTube LIKE & SHARE

# மனித வாழ்க்கை நிலையில்லாமல் அற்ப காலமே வாழ்ந்து மறைந்து போகிறான்

# கடோபனிஷதம் கூறும் தத்துவம்

வேதங்களின் சாரத்தை தெளிவாக பார்த்தோம். அதை படித்த அறிவு நுட்பமுடையவாசகர்களுக்கு ஒரு கேள்வி எழும்பும். வேதத்தை அறிவின் பெட்டகமாக ஆராய்ச்சியின் உறைவிடமாக இதுவரை கருதி வந்திருக்கிறோம். ஆனால் சென்ற அத்தியாயங்களில் அவற்றை படிக்கும் போது நமது கருத்துக்கும், மதிப்பிற்கும் உரிய அளவிற்கு அதில் விஷயங்கள் எதுவும் விசேஷமாக இல்லையே என்று தோன்றும். இறைவனை துதிப்பதும் அவரிடம் பிரார்த்தனைகள் வைப்பதும் தான்வேதத்தில் மைய கருத்து என்றால் அறிவுக்கு அங்கே இடம் எது? என்றெல்லாம் தோன்றுவது இயற்கையாகும்.

## கடவுள் உருவாக்கிய மதம்

மிக முக்கியமாக ஒரு விஷயத்தை கவனத்தில் கொள்ளவேண்டும். துதிப்பாடல்களும், பிரார்த்தனைகளும் வேத சுலோகங்களில் அதிகம் தான் என்றாலும் அந்த சுலோகங்களின் மையக்கருத்தாக பல அரிய விஷயங்கள் மறைந்து கிடப்பதை வேத நூல்களை முழுமையாக படிக்கும்போது அறியலாம்.

அதே நேரம் வேதத்தின் நாத லையம் தான் ஜீவனே தவிர அதன் கருத்துக்கள் அவ்வளவாக முக்கியம் வாய்ந்ததாக எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

பிரபஞ்சத்தில நாலாதிசையிலும் பரவிஉள்ள சப்த சமுத்திரத்தை வேதங்கள் தனக்குள்கொண்டுள்ளது. அதை சுருதி சுத்தமாக பாராயணம் செய்யும்போது தான் வேத ஒளியில்நம்மால் முழுமையாக நனைய இயலும். அதேநேரம் வேத பரிபாஷையை அறியாமல் மொழிமாற்றம் செய்யப்பட்ட சுலோகங்களை படித்துவிட்டு வேதக் கருத்தை முழுமையாக புரிந்துகொள்ள இயலாது. எனவே வேதத்தை முழுமையாக அறிந்து கொள்ள நினைப்பவர்கள் வடமொழி பயின்று நான்கு வேதங்களையும் கற்றுக்கொண்டால் அறிவின் சிகரத்தை நிச்சயமாக அடையலாம். மேலும் வேத அறிவை எல்லோரும் அறிந்து கொள்வதற்கு இன்னொரு வழியும் உண்டு. அதுதான் உபநிஷதங்கள் ஆகும்.

உபநிஷதங்களில்தான் இந்திய ஞானிகளின் அறிவு முழுவதும் கொட்டிக்கிடக்கிறது.இந்த நூல்களுக்குஇணையான அறிவு நூல்கள்இதுவரை உலகில் படைக்கப் பட வில்லை. என்றே சொல்லலாம்.

காடுகளில் தூய்மையான காற்றையும், தெளிவான நீரையும், பருகிக் கொண்டுஏகாந்தமாக வாழ்ந்த ரிஷிகள் தங்களது அனுபவ அறிவை உபநிஷதங்களில்அப்படியே உருக்கி வைத்திருக்கிறார்கள். அவைகளில்



www.aanmeegamalar.com

உள்ள வண்ணமயமான உண்மைகள் இன்றும் நமது வாழ்க்கைக்கு ஊன்று கோலாக மட்டுமல்ல, அஸ்திவாரமாகவும் அமைந்திருக்கிறது. அக்கருத்துக்களை ஓரளவு நாம் தெரிந்து கொண்டால் இந்து மதத்தினுடைய அறிவின் வரலாற்றின் மிக பெரும் பிண்ணனியை நன்கு உணரலாம்.


யோகி ஸ்ரீ ராமானந்த குரு

உபநிஷதங்கள் என்றால்அருகாமையில் இருப்பது என்றுபொருள் ஆகும். எதனருகாமையில்? சகலத்தையும் கற்றுணர்ந்த அனுபவித்து உணர்ந்த மகாஞானியின் அருகாமையில் இருப்பது என்று பொருள் ஆகும். பல நூறு உபநிஷதங்கள் உள்ளன. அதில் நூற்றி பதினெட்டு உபநிஷதங்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவைகள் ஆகும். ஜெகத்குரு ஆதிசங்கர பகவத் பாதாள் 10 உபநிஷதங்களுக்கு வியாக்கியானம் எழுதி உள்ளதால் அந்த பத்தும் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது. அவைகளில் சில உபநிஷதங்களின் கருத்துக்களை இப்போது நாம் சிந்தனை செய்வோம்.

அறிஞர்கள் பலராலும் வியப்புடன் பேசப்படுவது கடோபநிஷமாகும். இது அப்படி பேசப்படுவதற்கு மிக முக்கிய காரணம் வாழும் போது மனிதன் கடைபிடிக்க வேண்டிய கடமைகளையும், வாழ்ந்த பிறகு அவன் அடையும் நிலைமைகளையும் இந்த உபநிஷதம் தெள்ளத் தெளிவாக காட்டுகிறது. அதே நேரம் வாழ்க்கையை பற்றியுள்ள அச்சத்தை விலக்கவும் வழிவகை செய்கிறது.

கடற் என்ற முனிவரால் இயற்றப்பட்டது கடோபநிஷதம் ஆகும். இது யஜுர் வேத்தில் தைத்திரிய பிரிவில் இடம் பெற்றிருக்கிறது. பழைய கால வடமொழி இலக்கியத்தில் காணப்படுகின்ற கதையமைப்பு இந்த உபநிதத்தில் மையமாக எடுத்தாளப்பட்டிருக்கிறது. வாஜசிரவஸ் என்ற ஏழை அந்தணன் மகன் நசிகேதன் இவன் குழந்தை பருவத்திலேயே ஆத்ம விழிப்பு பெற்ற வன். ஒரு சமயம் இவனது தந்தை யாகம் நடத்தி மெலிந்து போன பசுக்களை தானம்கொடுக்கும் போது அப்படி கொடுப்பது தவறென தந்தைக்கு சுட்டிக்காட்டி அப்பசுக்களுக்கு பதிலாக தன்னைத்தானம் கொடுக்குமாறு வற்புறுத்துகிறான்.

பையன் பலமுறை ஒரே விஷயத்தை வற்புறுத்தியதால் எரிச்சலுற்ற தந்தை மகனை பார்த்து உன்னை எமனுக்கு தானம் கொடுத்துவிடேன் என்கிறான்.

இதைக்கேட்ட நசிகேதன்தான் யாருக்கு தாரை வார்க்கபட்டோமோ அவரிடத்தில் இருப்பதுதான் தர்மம் என்று கருதி எமன் உலகம் செல்கிறான். எமனிடம் 3 வரங்களையும் பெறுகிறான்.

முதலாவது தன்னை உயிரோடு பெற்றவர்களிடம் திருப்பி அனுப்பவேண்டும், என்பது இரண்டாவது தன்னுடைய நற்செயல்கள் எதுவும் பலம் இழக்காமல் இருக்க வேண்டும். 3வதுதாக பெற்றதுதான் மிக முக்கியமான வரமாகும். மறு பிறப்பை வெல்லும். வழியை தனக்கு சொல்ல வேண்டும். என்பது ஆகும்.

கடோபனிஷதம் 2 பிரிவாக இருக்கிறது. ஒவ்வொரு பிரிவிலும் மூன்று உட்பிரிவுகள் இருக்கிறது. இதனுடைய பிரார்த்தனை மந்திரம் மிகவும் கவிதை நயத்துடன் அழகிய முறையில் அமைந்துள்ளது. இறைவன் நம் இருவரையும் காப்பாறாக. நமது இருவரிடமும் அவர் மனநிறைவு கொள்வாராக. நாம் சீறிய திட்டத்துடனும் சுறுசுறுப்புடனும் செயல்படுவோமாக. கல்வியின் மூலமும், அனுபவத்தின் மூலமும் ஆன்ம ஒளியில் பெறுவோமாக. நம்மிடையே எந்த பொழுதிலும் எந்த நிலையிலும் வெறுப்பும் பகையும் ஏற்படாது உழைப்போமாக என்று தொடங்கும் பிரார்த்தனை மந்திரம் இன்றைய நிலையிலும், எந்த அளவிற்கு தேவைப்படுகிறது என்பதை சிந்திக்க வேண்டும்.

ஒரு நீண்ட புல்லானது தளிராக இருந்து வளர்ந்து உலர்ந்து காய்ந்து போவது போல் ஒவ்வொரு மனிதனும், தனது வாழ்க்கை நிலையில் நிலையில்லாமல் அற்ப காலமே வாழ்ந்து மறைந்து போகிறான். பிறகு மீண்டும் பிறந்து அதன் பிறகும் இறந்து தொடர்ச்சியாக பிறவிதளைக்குள் சிக்கி தவிக்கிறான். இந்தக்கருத்தை எடுத்த உடனேயே கடோபனிஷதம் தூக்கிக் காட்டுகிறது. எப்படியென்றால் எல்லா உயிர்களும் தோன்றி வளர்ந்து முதிர்ச்சியடைந்து சிதைந்து மடிகின்றன. மனிதனின் நிலையும் அதுதான் சாஸ்வதமான வாழ்க்கையை பெறாவிட்டாலும் கூட தொடர்ந்து வாழ்வதை தவிர்க்க இயலாது. என்ற வாசகத்தால் மறுபிறவி சித்தாந்தம் வலியுறுத்தப்படுகிறது.

மேலும் வாழ்க்கையின் படித்தரத்தைஅதாவது பரிணாம வளர்ச்சியை அழகிய முறையில் இந்த உபநிஷதம் வடிவமைத்து காட்டுகிறது. உங்கள்

www.aanmeegamalar.com




மூதாதையரை பொறுத்த வரை அவர்களது வாழ்க்கை எப்படி இருந்தது. என்பதை எண்ணிப்பாருங்கள் இப்போது இருக்கும் நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள் என்பதை அவர்கள் வாழ்க்கையோடு ஒப்பிட்டு பாருங்கள் மனிதன் தானியப்பயிர்களைபோல வளர்ந்து முதிர்ந்து உதிர்கிறான். தானியங்களை போலவே மீண்டும் முளைத்து எழுகிறான். இந்த வாசகம் மனிதனின் வாழ்க்கை மரணத்தால் கூட முடிவடையாமல் மீண்டும் மீண்டும் ஒரு சக்கரத்தை போல சுழன்று கொண்டிருப்பதை நமக்கு காட்டுகிறது.




இன்று விஞ்ஞானிகளும் சரி மெய்ஞானிகளும் சரி ஒரு விஷயத்தைப் பற்றி தொடர்ந்து வாதப்பிரதிவாதங்கள் செய்து வருகிறார்கள். அது என்னவென்றால் மரணத்துக்கு பிறகும் மனித வாழ்க்கை தொடர்கிறது என்றும் இல்லை இல்லை அத்தோடு முற்று பெற்று விடுகிறது என்றும் கருதுவதாகும்.

இதில் எது உண்மை என்பதை கடோபனிஷதம் மிக தெளிவாக நமக்கு சொல்கிறது. இந்த விஷயத்தில் தேவர்களுக்கு கூட இன்னும் சந்தேகம் இருந்து வருகிறது. மறுபிறப்பு கர்மாக்கள் என்பதை புரிந்து கொள்வது அத்தகைய கடுமையான விஷயமாகும்.

அந்த உண்மைகள் வெகு நுட்பமானது. அதை தொடர்ச்சியான மனப்பயிற்சியாலும் ஒருமைப் பாட்டாலும், உணர்ந்து கொள்ளலாமே தவிர வாதங்களால் அல்லது பௌதிக சாதனங்களால் நிறுபித்து விட இயலாது என்று மிக தெளிவாக அருதியிட்டு உபநிஷதம் கூறுகிறது.

நசிகேதன் எமதர்மனிடம் மிக முக்கியமான கேள்வியை வைக்கிறான். ஒரு மனிதன் நிலையான சுகத்தை அடைவது எப்படி? பெண் சுகத்தால் சாசுவதமான இன்பத்தை அடைந்து விடமுடியாது. அந்த சுகத்தை முதுமையானது தடுத்துவிடும்.

அதேபோல அதிகார பலமும் நிலையான இன்பத்தை தந்துவிட முடியாது. போட்டிகளும், யுத்தங் களும் பதவிகளை எப்போதுமே நிலையில்லாது செய்துவருகின்றன. பணத்தாலும் மனித மனம் நிறைவு கண்டுவிடுவது இல்லை. மரணத்தை ஒவ்வொரு நிமிடமும் எதிர்பார்த்து அச்சத்துடன் காத்துக்கொண்டிருக்கும், மனதை பதவியும், பெண்ணும் செல்வ வளமும் திருப்தி அளிக்க விட்டுவிடாது. ஆகவே நிலையான இன்பம் அழியாத வாழ்க்கை எது? அதை எனக்கு விளக்கமாக சொல் என்கிறான்.

இதற்கு தர்மத்தின் தலைவனான மரண தேவன் சரியான பதிலை தருகிறான். தகுதியானது என்பது வேறு சுகம் தருவது வேறு. இரண்டும் வெவ்வேறு கோணத்தில் பலன்களை தந்து மனிதனை பிணைத்து வைத்திருக்கிறது. இவ்விரண்டிற்கு உள்ளே உள்ள தகுதியானதை ஏற்றுக்கொள்பவனுக்கு நன்மையே விளைகிறது. ஆனால் சுகம் ஒன்றையே குறிக்கோளாக கொண்டவன் தன்னுடைய நோக்கில் தோல்வி அடைகிறான்.

அறிவாளிகளான சிலர் மட்டுமே சுகமானதை தவிர்த்து விட்டு தகுதியான பாதையை தேர்ந்தெடுத்து வெற்றி பெறுகிறார்கள். ஆனால் பலநூறு ஜனங்கள் தகுதியானது எது என்பதை அறியாமல் இருக்கிறார்கள். அதனால் அவர்களது வாழ்க்கை பாதை சிக்கல் மிகுந்ததாக இருக்கிறது. இதை மிக நுட்பமான முறையில் தான் தெரிந்து கொள்ள இயலும்..

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434







www.aanmeegamalar.com

## நொய்டாவில் 1000 சதுர மீட்டர் நிலப்பரப்பில்

# முருகனுக்கு கோவில்

### வேதப் பிரச்சாரர் சன்ஸ்தான் அமைப்பினர் பெரும் முயற்சி

நொய்டாவில் 1000 சதுர மீட்டர் நிலப்பரப்பில் தமிழ் கடவுள் முருகனுக்கு கோவில் நிர்மாணிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பணியினை வேதப் பிரச்சாரர் சன்ஸ்தான் (VPS), நொய்டா, என்ற அமைப்பு ஒருங்கிணைந்து நடத்திவருகிறது.

முருகன் கோவிலை அமைக்க வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் கூடிய தென்னிந்திய மக்களால் தொடங்கப்பட்டுள்ள இந்த அமைப்பு, நொய்டாவில் (உத்தர பிரதேசம்), முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அதன் பக்தர்களுக்கு சேவை செய்து வருகிறது. ஸ்ரீ விநாயகா மற்றும் ஸ்ரீ கார்த்திகேயா கோவில், பிரிவு 62, நொய்டா, ஸ்ரீ வரசித்தி விநாயகர் திருக்கோயில், பிரிவு 22. என்ற இரண்டு கோவில்களை வேதப் பிரச்சாரர் சன்ஸ்தான் அமைப்பு நிர்வகித்து வரும் நிலையில்.

புதிதாக முருகன் கோவில் ஒன்றினை உரு வாக்கும் பணியில் முனைப்பு காட்டி வருகின்றனர்.



எஸ்.வெங்கடேசன்

இந்த அமைப்பின் சார்பில், சுமார் அறுநூறு தென்னிந்தியக் குடும்பங்கள் சேர்ந்து முருகன் கோவிலை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுள் ளனர், இந்த அமைப்பில் பலர் தகவல் தொழில் நுட்பத் துறைகள், வங்கிகள், மத்திய அரசு மற்றும் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிகின்றனர்.

இந்த அமைப்பினர் தென்னிந்திய விழாக்கள், வழிபாட்டு தொடர்புடைய நிகழ்ச்சிகளை வெகு விமரிசையாக செய்து வருகின்றனர். சமூக பிரார்த்தனைகள் மற்றும் பல்வேறு ஹோமங்களை நடத்துவது, உடல் நலன் இன்றி இருக்கும் அன் பர்கள் நலம்பெற அவர்ளுக்காக சிறப்பு யாகங்கள் போன்றவற்றை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

மேலும் தற்போது உலகையே அச்சுறுத்திவரும் கொரானா போன்ற கொடிய நோயினை அழிக்கவும், இந்த நோயின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்கள், உயிரிழந்தவர்களுக்கு சிறப்பு








பிரார்த்தனைகள் செய்யப் பட்டு வருகிறது.

வாரந்தோறும்இந்த அமைப்பினர் வார வழி பாட்டு நிகழ்வுகளைநடத்தி வருகின்றனர். ஸ்ரீ லலிதா சஹஸ்ரநாமம், ஸ்ரீநாராயணீ யம், முருக கோஷம் போன்ற பாராயணங்களை வார வழி பாடாக நடத்தி வருகின்றனர்.

கொரானா போன்ற நோய் தாக்கம் விரைவில் தீரவேண்டும் என்ற நோக்கத்தில் ‘தன்வந்திரி ஹோமம்’ ஏற்பாடு செய்யப்பட்டு, 'மனிதகுலத்தின் நலன்', மேலும் 'உலகளாவிய அமைதிக்காக', இந்த அமைப்பினர் நிர்வகித்துவரும் இரண்டு கோவில்களிலும். நொய்டாவின் பல்வேறு பகுதி களில் தங்கியுள்ள தென்னிந்திய மக்கள் மற்றும் அண்டை பகுதிகளில் இருந்து ஏராளமானோர் தவறாமல் இந்த யாகத்தில் கலந்து கொண்டு வருகின்றனர்.

இந்த அமைப்பினர் பராமரித்து வரும் இரண்டு கோவில்களிலும் கொரானா சமயத்தில் கூட சிறப்பு அனுமதி பெற்று தினசரி கோவில் சடங்குகள் நடத்தியுள்ளனர். அரசு வழிகாட்டுதல் நெறிமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்பட்டு கோவில் நிர்வாகம் சிறப்பாக இக்கோவில்களுக்கு சேவைசெய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வி.பி.எஸ்., அமைப்பினர் இந்த ஆண்டு முழுவதும் ரத்த தான முகாம், அன்னதானம், ஸ்ரீ தியாகராஜ ஆராதனை, ஸ்ரீராம நவமி, யஜுர் உபகர்மா, விளக்கு பூஜை, தனுர் மாச பூஜை, உள்ளிட்ட பல்வேறு கலாசார, சமய நிகழ்ச்சி களை நடத்தி வருகிறது. ஸ்ரீ ராமாயண நவகம், நவராத்திரி போன்ற விழாக்கள் சிறப்பாக கொண் டாடப்பட்டது..

இந்த அமைப்பினர் அமைக்கவிருக்கும் நொய்டாவில் 1000 சதுர மீட்டர் நிலப்பரப்பில் ஒரு ‘புதிய முருகன் கோவிலில் மூலவர் வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமணியர், மற்றும் பிரகார தேவதைகளான ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர், ஸ்ரீ திரிபுர சுந்தரி அம்மன், நவகிரகங்கள் மற்றும் ஸ்ரீ சாந்த ஆஞ்சநேயர். ஆகிய விக்ரகங்கள் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

அமையவிருக்கும் இந்த முருகன் கோவில் வளாகத்தில் கலாச்சார மற்றும் மத நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக, ஒவ்வொரு மண்டபத்திலும் 250 பேர் அமரக்கூடிய வகையில் பல்நோக்கு அரங்குகள் உள்ளன. இது தவிர, தனி உணவு கூடம் உள்ளது. இந்த செக்டார் 62 கோவில், நொய்டா ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட 1000 சதுர மீட்டர் நிலத்தில் வேகமாக வருகிறது. இக்கோவில் அமைப்பதற்கு நொய்டா ஆணையத்திடமிருந்து அனுமதி சான்றையும் பெற்று முருகன் கோவில் பணி சிறப்பாக நடைபெற்று வருவது குறிப் பிடத்தக்கது.

– எஸ்.வெங்கடேசன், நொய்டா

தொடர்பு எண் போன்: 9811161370










His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi
JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL
Srimatam Samsthanam
No. 1, Salai Street, KANCHEEPURAM - 631 502.

Date 12.07.2021

Vedic Prachar Sansthan, Regd.,
Noida
UTTAR PRADESH

Namaskaram.

His Holiness Sri Kanchi Kamakoti Peetam Jagadguru Sankaracharya Swamigal has blessed, Veda Prachar Sansthan, Noida and also the Varasidhi Vinayagar Temple at Noida. We are happy to note that the "Vedic Prachar Sansthan" is celebrating festivals like Sri Sankatahara Chaturthi, Sashti, Kirthigai, Panguni Uthiram, Sri Skandha Sashti, Sri Rama Navami, Navarathri and Sri Thyagaraja Aradhana etc.

We also note that the Vedic Prachar Sansthan has arranged for recitation of 'Sri Vishnu Sahasranamam', 'Sri Lalitha Sahasranamam', and other shlokas, at our Srimatam's Cultural Centre in Newdelhi.

We convey the Blessings of His Holiness to the members of the Temple committee and all other devotees to continue such activities vigorously.

For Sri Kanchi Kamakoti Peetam
Srimatam Samsthanam

MANAGER

# மரணத்திற்கு அஞ்சக்கூடாது

ப்ரிய குருதேவர் அருளுகிறார்:

"மரணம் வலியைக் கொடுக்கும் என்பதால் நாம் அதற்கு அஞ்சுகிறோம்; மேலும் நாம் அழிந்துபோய்விடுவோம் என்ற எண்ணத்தால் அதற்கு அஞ்சுகிறோம். இந்தக் கருத்து பிழையானது. லாஹிரிமகாசயர் மகாசமாதி (ஒரு குரு சுய நினைவுடன் தனது ஸ்தூல தேகத்தை நீத்து தன்னை பரமாத்மாவுடன் ஒன்றிணைக்கும் இறுதியான தியானம் மகாசமாதி எனக்கூறப்படுகிறது) அடைந்த மறுதினம் தசையுடனான உடலில் திரும்பி வந்தார். தாம் அழிக்கப்படவில்லை என்பதை அவர் நிரூபித்தார். பிரபஞ்ச விதிகளை வென்று விட்டவர்களின் உதாரணங்கள் மிகச் குறைவாக உள்ளன என்பதால், அவர்களுடைய அத்தாட்சியை உண்மையற்றது என ஒருவர் கூறக்கூடாது. எனது பரம பரமகுரு (ஒருவருடைய குருவினுடைய குருவின் குரு) பாபாஜி ஆகியோரின் தெய்வீக நிரூபணங்களை நீங்கள் அலட்சியம் செய்யக்கூடாது. மேலும் நான் கண்ட சாட்சியத்தையோ உயிர்பெற்றெழுந்த எனது குரு ஸ்ரீ யுக்தேஸ்வர் (மீண்டும் உயிர்ந்தெழுந்தார். பார்க்க ஒரு யோகியின் சுயசரிதம் அத் 43) அல்லது என்னுள் நானே அனுபவித்ததையோ நான் ஒதுக்கிவிட முடியாது. "இவ்வாத்மா ஒருபோதும் பிறப்பதுமில்லை இறப்பதுமில்லை. இது இல்லாதிருந்து பிறகு பிறந்ததன்று (இருந்து பிறகு இறந்துப் போவதன்று.) இது பிறவாதது, இறவாதது, தேயாதது, வளாராதது. மாற்றமெனும் மாயை ஸ்ரீ மந்திரத்தினால் தீண்டப்படாமல், என்றும் நீடித்து வாழ்வது. தேகச் சிதைவுகளின் அனைத்து சுழற்சிகளினூடேயும் ஆன்மா என்றும் நிலையானது. "(பகவத் கீதை அத்.2 ஸ்லோகம் 20)

"அனேக முறைகள் வெகுதொலைவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு சீடர் நோயுற்றிருக்கும்பொழுதோ அல்லது இறக்கும் தருவாயிலோ தனது பக்தியின் மூலமாக எனது சூட்சும சரீரத்தை அங்கு ஈர்த்திருக்கிறார். அத்தகைய ஒரு சம்பவம் இங்கு நிகழ்ந்தது. சேவாதேவி, பக்திமிக்க ஒரு சீடர். அவர் மிகக் கடுமையாக நோய்வாய்ப்பட்டு இருந்தார்; ஆனால் அவர் அதைப்பற்றி ஒருவரிடமும் ஒருபோதும் முறையிடவில்லை. அவர் இப்பூவுலகை விட்டுச் செல்லவேண்டிய நேரம் வந்துவிட்டதை அவர் தெரிந்திருந்தார். ஒரு நாள் லாஸ் ஏஞ்ஜலீஸில் அவரைக் காண நான் சென்றிருந்தபோது, என்னை இங்கு பிடித்துவைக்காதீர்கள், (மற்றவர்களுக்காக இறைவனிடம் பரிந்து வேண்டுவதன் மூலம் உயர்ந்த மகான்கள், இப்புவியில் ஒரு சீடர் தங்கி இருக்கும் காலத்தை நீட்டிக்க முடியும்) என்று என்னிடம் கூறினார். பின்னர் என்ஸினிடஸ் ஸ்ரீ ல் உள்ள ஸெல்ஃப் ஸ்ரீ ரியலைசேஷன் ஃபெலோஷிப் ஆசிரமத்தில் நான் சிறிது காலம் தங்கியிருந்தேன். எனக்கு ஒரு வானொலிக் கருவி தரப்பட்டிருந்தது. இந்தியாவிலிருந்து வரும் ஒலிபரப்பைக் கேட்பதற்காக நான் அதிகாலைகளில் விழித்துவிடுவேன். ஒரு நாள் காலையில் சேவாதேவியின் நுட்பமான சூட்சும அதிர்வலையை நான் உள்ளுணர்வாக திடீரென்று உணர்ந்தேன்; தனது பக்தியின் மூலமாக எனது சூட்சும உடலைத் தன்னிடம் ஈர்த்துவிட்டார். எனது ஸ்தூல உடல் இறந்துவிட்டது போன்றிருந்தது. சேவாதேவி இறப்பதற்கு சிறிது முன்பாக "சுவாமிஜி இங்குள்ளார்!" எனக் கூவியதாக என்னிடம் பின்னர் கூறினர். மறு உலகினுள் என்னால் சுயநினைவுடன் அழைத்துச் செல்லப்படுவதை அவர் உணர்ந்திருந்தார். (இது புனிதமான குரு ஸ்ரீ சிஷ்ய உறவில் அளிக்கப்படும் உறுதி மொழிகளில் ஒன்றாகும். தனது சீடனின் மரண சமயத்தில் சூட்சும உலகின் புதிய வாழ்விற்கு குரு சீடனை அழைத்துச் செல்ல வருவார்) சிறிது காலத்திற்குப் பிறகு அவருடைய பிரகாசிக்கும் சூட்சும உருவத்தை நான் கண்டேன். அவர் உயிருடன் இருக்கையில் எவ்வாறு தோற்றமளிப்பது வழக்கமோ அதேபோல் நிஜமாக எனது வகுப்பொன்றில் அமர்ந்துகொண்டிருந்தார். அச்சமயத்தில் எவராவது என்னைத் தொட்டிருந்தால்,

117
பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு
மேம்படுவதற்காக

www.aanmeegamalar.com

அவர்கூட அவரைக் கண்டிருப்பார். இருப்பினும் அந்த சூட்சும உணர்வுநிலையினுள் ஒருவர், மற்றவர்கள் தன்னைத் தொடுவதை பொதுவாக அனுமதிப்பதில்லை,'' எனக் கூறுகிறார்.

மேலும் அவர் தொடர்கிறார்: "நாம் எத்தனையோ தடவைகள் இறப்பு, மறுபிறப்பு ஆகியவற்றினூடாகச் சென்றுள்ளோம். பிறகு ஏன் இறப்பைப்பற்றி பயப்படவேண்டும்? அது நம்மை விடுவிப்பதற்கு வருகின்றது. நீங்கள் இறப்பதற்காக ஆசைப்படக்கூடாது; ஆனால் நம்மை அது பலப்பல தொல்லைகளிலிருந்து தப்புவிக்கும் என அறிந்துகொள்வதில் மகிழ்ச்சியுற்று இருங்கள். அது வாழ்க்கையின் கடுமையான உழைப்பிற்குப் பின்னால் உள்ள ஓர் ஓய்வுகால ஊதியமாகும். நான் இறப்பை மிகவும் வசீகரமானதாக செய்து கொண்டிருக்கிறேன்!''.

"மக்கள் அந்த தசையினாலான கூண்டினுள் நெடுங்காலம் இருந்துவிட்டதால் அதன் பாதுகாப்பை விட்டுச் செல்வதில் அவர்கள் அதைரியப்படுவதாலும்கூட இறப்பைக் கண்டு அஞ்சுகிறார்கள். ஆனால் அஞ்சுவது முட்டாள்தனம். சற்றே எண்ணிப்பாருங்கள். தேகமாகிய வாகனத்தின்மீது பழுதுபார்க்கப்பட்ட டயர்கள் இனியுமில்லை. ஒட்டுப்போட்ட வாழ்க்கை இனியுமில்லை. இந்தப் பழைய வாகனமாகிய உடம்பை இறப்பு வரும்வரையில் நாம் வைத்துக்கொண்டிக்க வேண்டும் என்பது இறைவனுடைய விருப்பமாதலால், அதை நாம் வைத்துக்கொண்டு அக்கறையுடன் பராமரிக்க வேண்டும். ஆனால் நாரதமுனிவரைப்போன்று எளிதாக சமாதி நிலைக்குச் செல்லவும், தனது தேகவாகனத்தை மாற்றிக்கொள்ளவும் இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் வல்லமைத் தரவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர் தெய்வீகப் பரவசத் தொடர்பில் இறைவனைப் பற்றி பாடிக்கொண்டிருந்தார்; அதன்பின்பு தன் சாதாரண உணர்வுநிலைக்குத் திரும்பியதும், தன் முதிர்வடைந்த தேகத்தை உதிர்ந்துவிட்டு, ஒரு புத்தம் புதிய இளமையான உடலில் 'மறுபிறவி' எடுத்துள்ளதைக் கண்டார். அதுவே மிக உயர்வான கூடுவிட்டுத் கூடுபாய்தல் ஆகும். (கூடுவிட்டுக் கூடுப்பாய்தல் ஆன்மா இறக்கும் தருணத்தில் ஓர் உடலிலிருந்து மற்றொரு உடலிற்கு மறுபிறவி எடுப்பதற்காகச் செல்லும் நிகழ்வு. தாழ்ந்த உயிரின உடல்களுக்கு பின்னோக்கிச் செல்லாமல் வாழ்க்கையின் இயல்பான மேல்நோக்கிய பரிணாம வளர்ச்சியை பின்பற்றுகின்றது. ஆன்மா மனித உருவத்தில் பிறவி எடுப்பதற்கு முன்னர் கனிம வர்க்கத்திலிருந்து வெளிப்பட்டு, தாவரவர்க்கம், பின்னர் மிருகவர்க்கத்தின் ஊடாக வளர்ச்சி அடைகிறது என்று இந்து காஸ்திரங்கள் போதிக்கின்றன. அதன் பின்பு திரும்பத் திரும்ப நிகழும் மனிதப் பிறப்புகள் மற்றும் இறப்புகளின் சுழற்சி மூலமாக, அவற்றின் விட்டுவிட்டுப்பெறப்படும் பாடங்களுடன் ஆன்மா இறுதியாக மகாமனிதனில், இறை ஞான ஞானம் பெற்ற மனிதனில் பூரணத்துவத்தைக் காண்கிறது)

மேலும் அன்புமிக்க குருதேவர் கூறுகிறார்: "இறந்துகொண்டிருந்த ஓர் இளைனைப்பற்றிய கதை ஒன்று இந்தியாவில் உண்டு. அவன் தன்னைச் சுற்றி இருந்த துயர அழுகுரலைக் கேட்டு, கூவினான்:

"நித்திய ஒளியும் அன்பும் நிறைந்த தேசத்திற்கு
நான் உயரே பறக்கையில்
ஏளனம் செய்யாதீர் என்னை
உங்கள் பரிதாப அழுகையினால்
பரிதாபப்பட வேண்டியது நானேதான்
உங்களுக்காக.
நோயோ, எலும்புகள்
நொறுங்குதலோ,
துயரமோ, கொடிய இதய
வலிகளோ
இனி எனக்கில்லை.
நான் கனவு கண்டது ஆனந்தம்,
நான் ஊர்ந்து
செல்வது ஆனந்தத்தில்,
நான் இனி என்றென்றும்
சுவாசிப்பது
ஆனந்தத்திலே.''



மாதம் இரண்டு முறை
இலவசமாக வெளிவரும்
“ஆன்மிகமலர் மெயில் புத்தகம்”
aanmeegamalar.com
இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு
செய்தும் படிக்கலாம்







“இவ்வுலகில் உங்களுக்கு என்ன நேரப்போகிறது என்பது உங்களுக்குத் தெரியாது; நீங்கள் தொடர்ந்து வாழ்ந்துகொண்டு, கவலைப்பட்டுக்கொண்டே இருக்கவேண்டியதுதான். இறந்து போகிறவர்கள் நம்மிடம் பரிதாபம் கொள்கின்றனர். அவர்கள் நம்மை ஆசீர்வதிக்கின்றனர். அவர்களுக்காக நீங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும்? நான் இதை தனது புத்திரனை இழந்துவிட்ட ஒரு பெண்ணுக்குக் கூறினேன். நான் விளக்கமளித்து முடிந்ததும், அப்பெண் உடனே தனது கண்ணீரைத்துடைத்துவிட்டுக் கூறினாள், இதற்குமுன்பாக இவ்விதமான அமைதியை நான் ஒருபோதும் உணர்ந்ததில்லை. எனது புத்திரன் விடுதலை பெற்றுள்ளான் என்பதை அறிவதில் மகிழ்ச்சி அடைகிறேன். அவனுக்கு பயங்கரமான ஏதோ ஒன்று நிகழ்ந்து விட்டதாக நான் எண்ணினேன்.”

“வாஸாம்ஸி ஜீர்ணானி யதா விஹாய
நவானி க்ருஹ்ணாதி நரோபராணி
ததா சரீராணி விஹாய ஜீர்ணா
ன்யன்யானி ஸம்யாதி நவானி தேஹீ”

பழுதடைந்த வீட்டை – வசிப்பதற்கு பயன்படுத்த முடியாத நிலை வரும்போது ரு புதுப்பிப்பது எவ்வாறோ, அல்லது அழுக்கான உடையை விட்டுவிட்டு புதிய உடையை ஏற்றுக்கொள்வது எவ்வாறோ அதுபோலவே ஜீவனுக்கு சரீரம் போகங்களை அனுபவிப்பதற்கு இயலாதாகும்போது அதை விட்டு வேறு ஒரு சரீரத்தை அடைகிறது. ஒரு சரீரத்தை விடுதலும் மற்றொரு சரீரத்தை அடைதலுமாகின்ற இந்த சம்பிரதாயத்தைத்தான் பிறப்பு என்றும் இறப்பு என்றும் சொல்கிறது. ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கு மாறி வசித்தலோ, ஓர் உடையை விட்டு மற்றொரு உடையை மாற்றி உடுத்தலோ எவ்வாறு துக்ககாரணமில்லையோ அதுபோலவே பிறப்பு இறப்புகளும் துன்பத்திற்கு காரணமாகவில்லை. வீடு அல்லது உடை மாற்றுவதால் நபருக்கு மாற்றம் அல்லது ஏற்றத்தாழ்வு ஏற்படாததுபோல், சரீர மாற்றம்கொண்டு ஜீவனுக்கும் எந்த ஒரு வித்தியாசமான நிலையும் ஏற்படுவதில்லை” (பகவத் கீதை அத்.2 ஸ்லோகம் 22)

எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சுவர்க்கத்தை அகத்துள் கொண்டு செல்லுங்கள்.

ப்ரிய குருதேவர் அருளுகிறார் “நீங்கள் வெற்றிகொள்ளவேண்டிய மிகவும் கடுமையான தடங்கல் நீங்களேதான். இரவில் தியானம் செய்வதற்கென நீங்கள் அமர்ந்ததும், உங்களுடைய மன அமைதியின்மையும், படபடப்பும் உங்களுடனேயே உள்ளன. உங்களுடைய மனதையும் தேகத்தையும் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். உங்களுக்கே அரசனாக நீங்கள் இருங்கள். எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய ஒரு சுவர்க்கத்தை உங்களுக்குள்ளே கொண்டுசெல்லுங்கள்; வாழ்விலோ அல்லது சாவிலோ, சுவர்க்கத்திலோ அல்லது நரகத்திலோ, அந்த அக சுவர்க்கம் உங்களுடனேயே இருக்கும். ஆழ்ந்தும் மனப்பூர்வமாகவும், “ இறைவா, உம்மை அறிய நான் பேரவாவுடன் உள்ளேன். நீர் எனக்கு பதிலளித்தே ஆக வேண்டும்!” எனப் பிராத்தியுங்கள். மறுநாள் காலை, “ இறைவா, நீ என்னிடம் வந்தேயாக வேண்டும்!” என்று மீண்டும் பிரார்த்தியுங்கள்; மறுநாள் இரவும் இதே முறையில் உங்களுடைய இதயத்தின் மொழியில் மீண்டும் பிரார்த்தியுங்கள். நீங்கள் இவ்வாறு தொடர்ந்து செய்தால், அவன் பதிலளித்தே ஆக வேண்டும். ஆனால் நீங்கள் மனதின் பினைணியில் வேறொன்றைப்பற்றி எண்ணியவண்ணம் அரை மனதுடன் பிரார்த்திக்கும்போது உங்களிடம் தனக்கு முதலிடம் இல்லை என்பதை இறைவன் அறிகிறான்; அதனால் அவன் பதிலளிப்பதில்லை.”

“இறைவனை முதலில் பெற்றிருங்கள்; இறைவனை இப்பொழுதே பெற்றிருங்கள். மாயை மிகவும், சக்தி வாய்ந்ததாகையால், தாமதிக்காதீர்கள. நீங்கள் உணர்வதற்கு முன்பே. இந்த உலகை விட்டுச் செல்லவேண்டிய நேரம் வந்துவிடும். உங்களுக்கு ஒரு நொடிப்பொழுது கிடைக்கும்போதெல்லாம் அமர்ந்து தியானம் செய்யுங்கள். எத்தனை தடவைகள்

உங்கள் பிரார்த்தனைக்கு பதில் கிடைக்காதபோதும், கவலைப்படவேண்டாம். தொடர்ந்து பிரார்த்தித்துக் கொண்டேயிருங்கள். மனப்பூர்வமாகப் பிரார்த்தியுங்கள். உங்களுடைய பிரார்த்தனை பதிலளிக்கப்படுகிறது என்பதை நம்புங்கள்.”

மேலும் அவர் தொடர்கிறார் “ எனது வாழ்வில் பிரார்த்தனைக்கு மறுமொழியாக இறைவனது அதிஅர்புதமான நிரூபணங்களை நான் கண்டுள்ளேன். சிறு பொருட்களுக்காக அல்லாமல். அவனுடைய எழுந்தருளலுக்காகப் பிரார்த்தியுங்கள் என நான் உங்களை ஊக்குவிக்கிறேன். அப்படிப்பட்ட பிராத்தனைதான் பயனுள்ளது. தினமும் இரவில் ஒன்று அல்லது இரண்டு மணிநேரங்களை தியானத்திற்காக தியாகம் செய்ய சம்மதித்தால், நீங்கள் இறைவனின் ராஜ்யத்திற்குள் புகுவீர்கள். நேரத்தைக் கவனிக்காதீர்கள். ஆழ்ந்த சிரத்தையுடன், “இறைவா நீ மட்டுமே எனக்கு வேண்டும், எனப்பிரார்த்தியுங்கள். தீய பழக்கங்களும் அமைதியின்மையும், உங்களுடைய முயற்சியிலிருந்து உங்களை அசைக்க முயலும். ஆனால் உங்களுடைய மனதை இறைவனில் நிறுத்துங்கள்; அவன் உங்களுள் எழுந்தருள்வதை உணர்வீர்கள்.”

“உலக இன்பங்களுக்கான ஆசைகள் மனிதனை பிறவிதோறும் திரும்பத் திரும்ப பூவுலகிற்கு இழுக்கும் காந்தசக்தியை உருவாக்குகின்றன. தங்களுடைய



குருப்ரியா

ஆசைகளை இறைவனில் நிறைவேற்றிவிட்டவர்களுக்கு இனிமேலும் மறுபிறவி தேவைப்படுவதில்லை. எந்த ஒரு விருப்பத்தையாவது அவர்கள் நிறைவேற்ற விரும்பும்போது, அவர்கள் அப்பொருளைப்பற்றி வெறுமனே சிந்தித்ததும், அது அவர்கள் முன்பாக உருவாக்கப்படுகின்றது. உங்களை நான் இப்போது காண்பது போல், என் அன்னை, இரத்தமும் சதையும் கூடிய உடலுடன் என் முன்பு தோன்றினார். நம் இதயங்களில் அவனுக்கு முதலிடம் கொடுத்ததும், அவன் தனது அன்பையும், நன்றியறிதலையும் காட்டுவதற்காக நமது விருப்பத்திற்குரிய பொருட்களை உருவாக்கும் அளவிற்கு இறைவன் எவ்வளவுகனிவுடையவன், எவ்வளவு அதிசயமானவன்! இறைவனுடைய உதவியுடன் ஆரோக்கியத்தையோ அல்லது செல்வத்தையோ அல்லது சக்தியையோ அல்லது நண்பர்களையோ நிரூபிக்கும் வல்லமை இருப்பது நல்லது. ஆனால் உங்களுடைய பிரார்த்தனைகளுக்கு பதிலளிக்கும்படி இறைவனிடமே நயந்துபேசி, அவனை உங்களால் இணங்கவைக்க முடியுமானால், நீங்கள் விதியை மாற்றவல்ல மனிதர். ஆகவே, இறைவனை உங்களுடைய வாழ்வில் நிரூபிக்கும்வரை ஓயாதீர்கள். நீங்கள் விரும்பிய அனைத்தையும் அவன் உங்களுக்குத் தருவான்; உங்களைச் சோதிப்பான். ஆன்ம வாழ்விலுள்ள சோதனைகளை வேறெந்த வாழ்வில் இருப்பதையும்விட கடினமானவை. ஆனால் அவனது சோதனைகளில் வெற்றிபெறும் நீங்கள் கூறுவீர்கள், “இறைவா எனது மிகப்பெரிய பிரார்த்தனை பதிலளிக்கப்பட்டுள்ளது. உன்னையன்றி வேறெதைத்தான் எனது இதயம் விரும்பியோ அல்லது வேண்டியோ நிற்கும்?”

அன்புமிக்க குருதேவர், தன்னுடைய அனுபவங்களை மிகத்தெளிவாக் கூறியுள்ளார். அவருடைய அனுபவங்களைப் பார்க்கையில், ஓர் உண்மையான குரு தமது சீடனை எவ்வாறு வழி, நடத்துகிறார் என்பதை தெரிந்துகொள்ள இயலுகிறது. மனித வாழ்க்கைக்கு முக்கியமாக என்னென்ன தேவை என்பதையும் தெரிந்துகொள்ளலாம். அவை, குரு, தியானம், இறைவன் ஆகும். இவை பரிணாம வளர்ச்சியடைந்த ஒரு மனிதனுக்கு தானாகவே கிடைக்கும் என்று குருதேவரின் போதனைகள் கூறுகின்றன.

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909

## ஆன்மிக மலர்கள்

- வெள்ளிக்கிழமைகளில் நவகிரக சுக்கிர னுக்கு அகல் விளக்கில்கற்கண்டு போட்டு, அதில் நெய் தீபம் ஏற்றி வழிபட, கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் நீங்கும்.
- பிரதோஷகாலத்தில், ரிஷபா ரூட மூர்த்தி யாய், மகேசனை தேவியுடன் வழிபடுவோர் 1000 அஸ்வமேத யாகங்களை செய்த பலனை பெறுவார்கள். அதிலும் ஈசானிய மூலையில் ஈஸ்வரனுக்கு காட்டப் படும் தீபாரதனையை பார்த்தால்எல்லா நோய்களும், வறுமையும் நீங்கும்.
- மாதாமாதம் உத்திர நட்சத்திரத்தன்று சிவனுக்கு தொடர்ந்து 18 மாதங்கள் பால் அபிஷேகம் செய்தால், விரைவில் திரு மணம் நடைபெறும்.

# நம்ம ஊரு கோவில்

**உங்கள் ஊரில் உள்ள கோவில்களைப்பற்றிய தகவல்களையும், சிறப்புகளையும் e-mail, WhatsApp வாயிலாக டைப் செய்து அனுப்புங்கள்.**

**நமது இதழ் மூலம் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள்....**

**பழமையான கோவில்கள், கிராமத்து கோவில் பற்றிய விவரங்களையும், வழிபாட்டு முறைகளையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள ஆன்மிக அன்பர்கள் வரவேற்கப்படுகின்றனர்.**


இ–மெயில் முகவரி:
aanmeegamalar@gmail.com
aanmeegamalar1@gmail.com




# தேவர்களுக்கு உதவிய மகன் மீட்க உதவிய பெருமாள்

# குருவித்துறை குருபகவான்

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அவ்வப்போது யுத்தம் மூண்டு விடும். அந்த யுத்தம் நடக்கும் போதெல்லாம் இராக்ஷசர்களுக்கு பக்கபலமாக இருந்தவாறு சஞ்சீவி மந்திரம் ஓதி யுத்தத்தில் உயிர் இழக்கும் ராக்ஷசர்களை சுக்ராச்சாரியார் பிழைக்க வைத்துக் கொண்டே இருந்ததினால் தேவர்களால் ராக்ஷசர்களை எளிதில் அழிக்க முடியவில்லை.

இப்படியாக சுக்ராச்சாரியார் செய்து வந்த காரியத்தினால் தேவர்களால் இராட்சசர்களின் படை பலம் குறைவதைத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. ஆனால் தேவர்களுக்கோ அப்படிப்பட்ட சக்தி மிக்க மந்திரத்தை பிரயோகித்துசுக்ராச்சாரி யாரைப் போல உதவ எவரும் கிடைக்கவில்லை என்பதினால் யுத்தத்தில் மரணம் அடைந்த தேவர்களின் படை எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போயிற்று. அதனால் கவலை யுற்ற தேவேந்திரானான இந்திரன் பிரும்மாவிடம் சென்று அதற்கு ஒரு வழி கேட்க பிரும்மாவோ சிவபெருமானிடம் சென்று உதவி கேட்டார்.

அதனால் கோபமுற்ற சிவபெருமான் ராக்ஷசர்களுக்கு உதவிக் கொண்டு இருந்த சுக்ராச்சாரியாரை அழைத்து வர நந்தீஸ்வரரை அனுப்பினார். அப்போது தியானத்தில் அமர்ந்து இருந்த சுக்ராச்சாரியாரை நந்தீஸ்வரர் அப்படியே தூக்கிக் கொண்டு வந்து விட சிவபெருமான் அவரை முழுங்கி விட்டார். அவர் வயிற்றுக்குள் சென்ற முனிவர் தனக்கு இருந்த விஷேச மந்திர சக்தியை உபயோகித்து சிவபெருமானின் விந்து மூலம் வெளியே வந்து மீண்டும் ராக்ஷசர்களுக்கு யுத்தங்களில் உதவலானார்.

அதனால் என்ன செய்வது என புரியாமல் குழம்பிப் போன தேவேந்திரன் பிரஹஸ்பதியிடம் சென்றார். அவரிடம் சென்று கேட்டார் 'தேவனே, நீர்தானே அனைவருக்கும் குருவானவர். உங்களிடம் இருந்து கற்ற மந்திரத்தைக் கொண்டு சுக்ராச்சார்யார் உயிரிழக்கும் ராக்ஷசர்களை பிழைக்க வைத்துக் கொண்டே இருக்கிறார். ஆனால் உங்களால் தேவர்களுக்கு ஏன் உதவ முடியவில்லை?'

அதைக் கேட்ட பிரஹஸ்பதி






கூறினார் ‘நீங்கள் கூறுவதும் சரிதான். நான் என்னுடைய மகன் கச்சாவை அவரிடம் அனுப்பி அவரிடம் இருந்து அந்த மந்திரத்தைக் கற்றுக் கொண்டு வரச் சொல்கிறேன். மூன்று முறை தொடர்ந்து அந்த மந்திரத்தை ஒருவரே கேட்டால் அதன் சக்தி அழிந்து விடும். அவன் சுக்ரச்சாரியாரிடம் மாணவனாகச் சென்று மந்திரத் தைக் கற்று வந்து அதை அழிப்பான்’ என்றார்.

ஆகவே பிரஹஸ்பதியின் மகனான கச்சா சுக்ராச்சாரியாரிடம் ஒரு பிராமண இளைஞன் போலச் சென்று தன்னை அவருடைய மாணவராக ஏற்றுக் கொண்டு மந்திர போதனைகளைக் கற்றுத் தர வேண்டும்’ என வேண்டினார். அதைக் கேட்ட சுக்ராச்சாரியாரும் அவனிடம் ‘மகனே நீ யார், உன் தந்தை யார், என்னிடம் போகும்படி யார் உன்னை இங்கு அனுப்பினார்கள்?’ என்று கேட்க கச்சா கூறினார் ‘மகரிஷியே, உங்களிடம் சென்று கல்வி பயிலுமாறு என்னை யார் அனுப்புவார்கள்? உங்களுடைய புகழோ ஜகம் எங்கும் பரவிக் கிடக்கிறது. அதைக் கேள்விப்பட்ட நான்தான் தானாகவே உங்களிடம் வந்துள்ளேன். நான் ஒரு எளிய பிராமணன்’ என்று கூறினார்.

அவர்கள் பேசிக்கொண்டு இருக்கையில் அவர்கள் அருகில் சுக்ராச்சாரியாரின் மகள் தேவயானி நின்று கொண்டு இருந்தாள். கச்சாவின் அழகைக் கண்டவள் அவர் யார் என்று எண்ணிக் கூடப் பார்க்காமல் அவரைக் கண்ட மாத்திரத்திலேயே அவர் மீது காதல் கொண்டு விட்டாள். ஆகவே அவள் தனது தந்தையிடம் ‘அப்பா, இவரைக் கண்டாலே ஏழை பிராமணர் என்பது நன்றாகவே தெரிகிறது. ஆகவே இவரை நீங்கள் ஏன் உங்கள் மாணவராக ஏற்றுக் கொள்ளக் கூடாது’ என்று கேட்டாள்.

தன் மகள் மீது அளவற்ற அன்பை வைத்து இருந்த சுக்ராச்சாரியாரும் கச்சாவை தயங்காமல் தனது மாணவராக ஏற்றுக் கொண்டு விட்டார். அதைக் கண்ட இராட்ஷசர்கள் சிஷ்யனாக வந் துள்ளது தேவர்களின் ஒற்றனாக இருக்கலாம் என சந்தேகப்பட்டார்கள். ஆனால் அவர்கள் எழுப்பிய சந்தேகத்தை சுக்ராச்சாரியார் ஏற்கவில்லை.

தன்னிடம் மாணவனாக வந்துள்ள ஒருபிராம ணர் அப்படி செய்யமாட்டார் எனக் கூறி விட்டார். பிரஹஸ்பதியின் சக்தியினால் சுக்ராச்சாரியாரினால் ஞானக் கண்ணைக் கொண்டு வந்துள்ளவரின் உண்மையான சொரூபத்தை தெரிந்து கொள்ள முடியவில்லை. அந்த சக்தியை தம் பிள்ளையின் மீது பயன்படுத்த முடியாமல் பிரஹஸ்பதி தடுப்பு மந்திரம் போட்டு இருந்தார். ஆகவே சுக்ராச்சாரியாரை தம் கருத்துக்கு உடன்படுத்த முடியாமல் போன ராக்ஷசர்கள் சுக்ராச்சாரியாருக்கு தெரியாமல் வனத்துக்கு சென்று இருந்த கச்சாவை கொன்று விட் டார்கள்.

மாலை நெடுநேரமாகியும்வனத் துக்கு சென்ற கச்சா திரும்பி வராத தைக் கண்ட தேவயானி கவலைக் கொண்டு தன் தந்தையிடம் அது பற்றிக் கூற சுக்கிராச்சாரியார் நடந்த வற்றை தன் ஞானக் கண்களால் பார்த்து அறிந்து கொண்டார்.



அழகுராஜா




சஞ்சீவி மந்திரம் ஓதி அவரை பிழைக்க வைத்து வீட்டிற்கு அழைத்து வந்தார்.

இரண்டாம் முறையும் ராக்ஷசர்கள் கச்சாவைக் கொன்று அவரை வெட்டி நான்கு திசைகளிலும் அவரது உடல்களை தனித்தனியே கொண்டு போய் போட்டு விட்டார்கள். இந்த முறையும் நடந்தவற்றை தன் ஞானக் கண்களால் பார்த்து அறிந்து கொண்டுவிட்ட சுக்ராச்சாரியார் மீண்டும் கச்சாவை பிழைக்க வைத்தார்.

ஆகவே ராக்ஷசர்கள் மூன்றாம் முறையாக தக்க ஏற்பாடு செய்து கச்சாவைக் கொன்று விட்டு அவரை எரித்தும் விட்டார்கள். அது மட்டும் அல்ல அவனது சாம்பலை உணவுடன் கலந்து சுக்ராச்சாரியாருக்கு தெரியாமல் அவருக்கே கொடுத்து விட்டார்கள்.

மாலை நெடு நேரமாகியும் வனத்துக்கு சென்ற கச்சா திரும்பி வராததைக் கண்ட தேவயானி கவலைக் கொண்டு தன் தந்தையிடம் அது பற்றிக் கூற சுக்கிராச்சாரியார் நடந்தவற்றை தன் ஞானக் கண்களால் அறிந்து கொண்டார். கச்சா தம் வயிற்றில் உள்ளார் என்பதை புரிந்து கொண்டார். ஆகவே அந்த சாம்பல் ஜீரணம் ஆகாமல் அப்படியே வயிற்றில் தங்கி இருக்குமாறு மந்திரம் ஓதிக் கொண்டார். ஆனால் அவரை எப்படி பிழைக்க வைப்பது? சஞ்சீவி மந்திரம் ஓதி அவரை உயிர் பிழைக்க வைத்தால் அவர் தன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு வெளியில் வந்துவிடுவார். அப்போது தான் உயிர் இழக்க நேரிடும். அதன் பின் தன்னை யார் பிழைக்க வைக்க முடியும் என கவலைக் கொண்டார்.

அவருடைய மகளோ கச்சா உயிர் பிழைத்து எழ வேண்டும் என அடம் பிடித்தாள். ஆகவே என்ன செய்யலாம் என யோசனை செய்தார். அவளிடம் தன் வயிற்றுக்குள் உள்ள கச்சாவை உயிர் கொடுத்து எழுப்பி விட்டால் தான் மரணம் அடைந்து விடுவேன் என்பதை எடுத்துக் கூற அவளோ தனக்கு சஞ்சீவி மந்திரத்தைக் கற்றுக் கொடுக்குமாறும், அவர் இறந்து விட்டால் தான் அதை ஓதி அவருக்கு உயிர் கொடுத்து எழுப்புவதாகவும் கூறினாள். ஆகவே அவரும் வேறு வழி இன்றி அந்த மத்திரத்தை அவளுக்குக் கற்றுக் கொடுத்தார். அதை வயிற்ருக்குள் இருந்த கச்சாவின் ஆத்மா கேட்டுக் கொண்டே இருந்தது. அடுத்து தன் வயிற்றில் இருந்த கச்சாவை உயிர் பிழைக்க தாமே அந்த மந்திரத்தை ஓதிக் கொண்டதும் அதையும் கச்சாவின் ஆத்மா கேட்டுக் கொண்டே இருந்தது. சுக்ராச்சாரியாரின் வயிற்றுக்குள் இருந்த கச்சா அவர் வயிற்றை கிழித்துக் கொண்டு வெளியில் வர சுக்ராச்சாரியார் மரணம் அடைந்தார். ஆக சுக்ராச்சாரியாரின் வயிற்றில் இருந்த கச்சா அவர் வயிற்றில் இருந்து வெளியே வரும் முன் இரண்டு முறை அந்த மந்திரத்தைக் கேட்க நேரிட்டது. அடுத்து தனது தந்தை உயிர் பிழைக்க தேவயானி மந்திரத்தை ஓத சுக்ராச்சாரியாரும் உயிர் பிழைத்து எழுந்தபோது மூன்றாம் முறையும் கச்சாவினால் அந்த மந்திரத்தைக் கேட்க முடிந்தது. ஆகவே மூன்றுமுறை தொடர்ந்து அந்த மந்திரத்தை கச்சா கேட்டதும், அந்த மந்திர சக்தி சுக்ராச்சாரியாரிடம் இருந்து அகன்றது. அதன் பின் அவரால் அதை ஓதி இறந்து போன ராக்ஷசர்களை பிழைக்க வைக்க முடியவில்லை.

சுக்ராச்சாரியார் தன் மகள் தேவயாணியை மணம் முடித்து செல்ல வேண்டும் என்று கூற, அதற்கு கசன், உங்கள் வயிற்றிலிருந்து மீண்டு வந்துள் ளதால் தேவயானி எனக்கு சகோதரி முறை வேண்டும், என பக்குவமாகக் கூறி தேவலோகம் கிளம்பினான். கடும்கோபம் கொண்ட தேவயானி, கசனை ஏழு மலைகளால் தடுத்து நிறுத்தி அசுரலோகத்திலேயே தங்க வைத்தாள்.

கசனை காணாமல் தவித்த குருபகவான், வைகை நதிக்கரையில் பெருமாளை வேண்டி தவ மிருந்தார். அவர் முன்பு தோன்றிய பெருமாளும், கசனை மீட்டு குரு பகவானிடம் ஒப்படைத்தார். இந்த நிகழ்வுக்கு பின்னர் குரு பகவான் அந்த




இடத்தில் பெருமாள் சிலையை பிரதிஷ்டை செய்து சித்தர ரத வல்லப பெருமாள் என்று பெயர் சூட்டி வணங்கினார்.

இந்த நிகழ்வையொட்டி பாண்டிய மன்னர்களால் இங்கு குரு பகவான் கோயில் கட்டப்பட்டது என்பது புராணம்.

இந்த புராண நிகழ்வு நடைபெற்ற இடம்தான் மதுரையில் உள்ள குருவித்துறை குருஸ்தலம்.

மதுரையிலிருந்து 19 கிமீ தொலைவில் உள்ளது குருவித்துறை. பண்டைய காலத்தில் ‘குரு வீற்றிருந்த துறை’ என்று அழைக்கப்பட்ட இந்த ஊர் பெயர் காலப்போக்கில் ‘குருவித்துறை’ என்று மருவியது. இங்கு பழமையான சித்திர ரத வல்லப பெருமாள் கோயில் உள்ளது. கருவறையில் நின்ற கோலத்தில் ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக பெருமாள் காட்சியளிக்கிறார். கோயிலில் கொடி மரம் உள்ளது. இந்த கோயிலின் எதிரில் குரு பகவான் கோயில் உள்ளது.

மூலவராக குரு பகவானும், அருகே சக்கரத்தாழ்வார் சிலையும் உள்ளது. பெருமாளை நோக்கி குரு பகவான் தவ கோலத்தில் காட்சியளிப்பது வேறு எந்த கோயிலிலும் இல்லாத சிறப்பாகும்.மூலவர் சிலை அருகில் சக்கரத்தாழ்வார் சிலை உள்ளது. ‘திருவிளையாடற்புராணம்’என்ற நூலில் இந்த கோயிலின் பெருமைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமண பாக்கியம், தம்பதியர் ஒற்றுமை, தொழில் மற்றும் கல்வியில் மேன்மை உள்ளிட்டவற்றை இங்கு வரும் பக்தர்களுக்கு குரு பகவான் வழங்குவார் என்பது பக்தர்களின் நம்பிக்கை. வேண்டுதல் நிறைவேறிய பக்தர்கள் குருபகவானுக்கு கொண்டைக்கடலைபடைத்து, சிறப்பு பூஜை செய்கின்றனர். இங்கு ஆண்டு தோறும் குருப்பெயர்ச்சி நடக்கிறது.

குருபெயர்ச்சிக்கு இத்தலம் மிகச் சிறப்பு வாய்ந்த ஸ்தலமாக விளங்குகிறது. குரு பெயர்ச்சியாகும் இராசிக்காரர்களும், குரு பார்வையால் பலன் அடையவிருக்கும் இராசிக்குரியவர்கள் இத்த குருவை வழிபட்டால் நன்மை கிடைக்கும்.

இத்தலத்து குரு, அசுரர்களிடமிருந்து மகனை மீட்ட மகிழ்ச்சியில் இருப்பதால் குடும்பத்தில் பிணக்கு உள்ளவர்கள், பிள்ளை, பெற்றோர் முறையில் மனக்கசப்பு உள்ளவர்கள் இத்தலத்து குருவை வணங்கினால் குடும்பத்தில் மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி பொங்கும்.

தேவலோகத்திலிருந்த குரு பகவான் பூலோகத்துக்கு வந்து, பெருமாளை வழிபட்டதால், 'குரு வீற்றிருந்த துறை' என ஆரம்ப காலத்தில் அழைக்கப்பட்டது இந்தத் தலம். பின்னாளில் இதுவே மருவி, 'குருவித்துறை' ஆனது என்கிறார்கள்.

சிறப்பம்சம்: குரு பகவானாகிய பிரகஸ்பதிக்கு சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரத்தன்று ஒரு சித்திரத் தேரில் எழுந்தருளி காட்சி தந்தார். எனவே தான் இத்தலம் சித்திரை நட்சத்திரத்திற்குரிய கோயிலாக விளங்குகிறது. இங்குள்ள சித்திர ரத வல்லபபெருமாள் ஸ்ரீதேவி, பூதேவி தாயார்களுடன் சந்தன மரச்சிலையால் ஆன மூர்த்தியாக காட்சி தருவது விசேஷமான அம்சம்.

இருப்பிடம்: மதுரையில் இருந்து 23 கி.மீ., தூரத்திலுள்ள குருவித்துறைக்கு மதுரை பெரியார் பஸ் ஸ்டாண்டிலிருந்து பஸ் உள்ளது. குருவித்துறையில் இருந்து 3 கி.மீ. தூரத்தில் கோயில் உள்ளது.

இத்திருக்கோவில் தொடர்பு எண்: 94439 61948, 97902 95795

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

# தத்துவ நூல்கள் தோன்றியதன் அவசியம்

ஒருசமயம் சீக்கிரமாகவும் மற்றொரு சமயம் குறித்த நேரம் கடந்து வருவதும், நான் காலத்தைக் காப்பாற்றுகிறேன் என்ற கருத்தல்ல. காலத்தைக் கருத்தோடு உபயோகப்படுத்திக் கொள்ளு வதே அதைக் காப்பாற்றும் முறையாகும். ஒரு நிகழ்ச்சியின் ஆரம்பத்தை நிலைநிறுத்துவதே காலம் என்றாலும் அது நிகழ்ச்சியை மட்டும் நிலைநிறுத்தவில்லை. மனிதனின் நினைவிற்கு காலத்தையும் நிலைநாட்டுகின்றது. உயிர்வாழ்க்கையும் அந்த வாழ்க்கைக்கு உரிய உபயோகத்தை செய்து முடிப்பதும் பெரிதல்ல. அதை முடிப்பதற்கு உள்ள காலம் என்பது கடவுளால் காலத்தினுள் நிலைநாட்டப்பட்டிருக்கிறது. அது நமது நினைவினுள் நிற்க வேண்டும். ஆகவே எச்சமயத்திலும் எனது வேலையைத் தொடங்கி செய்வது என்பது எனது நிரந்தர எண்ணமாகும். ஏனென்றால் எனது செயல்களில் எல்லாம் குறித்த காலங்கள் குறிக்கின்றன.

❖❖❖

ஒவ்வொரு மொழியிலும் அந்த மொழியின் ஒவ்வொரு வார்த்தையிலும் இரண்டு அல்லது இரண்டுக்கும் மேற்பட்ட பொருள்கள் இருக்கின் றன. ஒரு பொருள் சாதாரணமானதே மற்றொரு பொருள் உட்பொருளைக் கொண்டது. அதனு டைய ஆழமான விளக்கம் இப்பரந்த உலகமே.

❖❖❖

நான் சொற்களிலுள்ள உட்பொருளை மட்டுமே எடுத்துக் கொள்ளுகிறேன். மேலேழுந்த வாரியான நினைவு என்பதே எனக்குக் கிடையாது. அது எனக்கு பழக்கம் இல்லை. இதுபோல ஒரு குறித்த நேரத்திற்கு வருவது வேலை செய்வது என்பது எனது கொள்கை. அந்த குறித்த நேரத்திலும் மற்ற எல்லா நேரங்களிலும் நான் கடினமான உழைக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அதுவும் எப்படி தெரியுமா? வயல்வெளிகளில் வேலை செய்கின்ற தொழிலாளியை போன்று உழைக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அப்படி செய்தால் தான் நாம் நமது வாழ்நாட்கள் என்ற காலத்திலுள்ள ஒவ்வொரு நொடியையும் கைகொள்ள முடியும். இப்படிப்பட்ட எனது செய்கையே நான் அடி எடுத்து வைத்த முதல் இராட்சஸ முயற்சி ஆகும். எனது முன்னேற்றத்தில் அடிச்சுவடு இதே.



❖❖❖

உங்களக்கு உங்களது குறித்த காலம் தெரியுமா? உண்மையாக குறித்த காலத்தில் உங்களது பணி தொடங்கி விட்டது என்று தெரியுமா? அல்லது இனிமேல் தான் துவங்கப் போகிறது என்பது தெரியுமா? தற்பொழுதும் நீங்கள் முன்னேற்றத்தில் தான் இருக்கிறீர்களா என்பது புலப்படுமா? இவைகளுக்கு நீங்கள் விளக்கமான பதிலும் அதன் தன்மையையும் குறித்தால் உலகம் உங்களை உண்மையாகவே புரிந்து கொண்டு உங்களுடைய தோற்றத்தின் உண்மையான காலத்தையும் உணர்ந்துவிடும்?

❖❖❖

என்னை நீங்கள் மன்னித்து விடுங்கள். நான் இன்னமும் அடர்ந்த காடு போன்ற சிந்தனை உலகத்தில் வழி தெரியாமல் துடித்துக் கொண்டிருக்கிறேன். இதனால் எனது உள் உள்ளத்தில் எந்தவித துக்கமும் இல்லை. இனியும் நான் எனது சரியான குறித்த காலத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன். இங்குதான் எனது துக்கமான வாழ்க்கை ஆரம்பமாகிறது.

❖❖❖

மேற்சொன்னபடி துக்கமான நினைவு தான் உங்களது முழு அறிவு என்றால், அதுதான் மனிதனுடையது




ஆசிரியர், வெளியீட்டாளர்
**N.P.சந்திரன்**
**C.V. நடராஜன்**
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா
செல்: 9994162192

♦♦♦

துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய்,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு
SML கிராபிக்ஸ்
செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
**aanmeegamalar.com**
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
**9444228203**


என்று சொன்னாலும் நான் எப்படி நினைத்துக் கொள்வது? நீங்களும் சிற்சில மனிதர்களும் இத்தகைய துக்கமான முழு அறிவில் உங்களது வாழ்வின் தோற்றத்தையும் குறித்த காலம் உழைப்பு இவைகளையும் எப்படித் தெரிந்து கொள்வீர்கள்? இப்புத்தகத்தைப் படிக்கின்ற மெய்யன்பரே கேளுங்கள். எனக்கு வாழ்க்கையில் நிரந்தரமான குரு கிடைத்ததே இல்லை. மேலும் நானே எனக்கென்று எனது முழு அறிவை வெளிப்படுத்த ஒரு அற்புதமான வடிவ அமைப்பையும் நான் கொள்ளவே இல்லை. இவைகள் எதிலுமே நிச்சயம் இல்லையே. நான் என்ன செய்வது? இது தான் என்னுடைய இதயம் பற்றி எரிகின்ற உண்மை விளக்கம் ஆகும்.

❖❖❖

உலகநிலையில் குறித்தநேரம், குறித்த தன்மை இச்சொற்களின் விளக்கம் என்ன? ஒரு ஈ நினைத்தபடி பறந்து வந்து உட்காருவதைப் போன்று குறித்த நேரத்தில் எதையும் செய்வது என்பதே இவைகளின் விளக்கம், தன்மை ஆகும். இத்தகைய நிலையே முன்னேற்றத்திற்கு வழிகாட்டுகிறது. அதனால் காலத்தை உணர்ந்தவனாய் இரு.

❖❖❖

காலமென்றால் உலகின் நிரந்தரச்சுழற்சி. சுழற்சியின் இயக்கங்களைக் குறிப்பிடுவதே காலம். இது மனிதனுடைய ஆசையாகவும் இருக்கிறது. அதனால்தான் ஆசையும் நகருகிறது. எனது நண்பனே இந்த அத்தியாயத்தின் உதவியால் ஒரு நல்ல தத்துவ வாழ்க்கை உன்னிடம் தோன்றி இருக்குமே. இதுவே காலம், குறித்த நேரம் என்பதாகும்.

❖❖❖

ஒரு வேலைக்கென்று குறிப்பிட்ட நியாயமான நேரத்தை எவ்வளவுக்கெவ்வளவு குறிப்பிட்ட நேரத்தைக் குறைத்துக் கொண்டு வேலையை செய்வனே செய்து முடிக்கிறாயோ அதுவே காலத்தை சேகரிக்கின்ற நேரமாகும். இதை நீ செய்கிறாயா? இதுதான் குறிப்பிட்ட நேரத்தை கடப்பது என்று சொன்னால் அதனுடைய உட்பொருள் என்ன? அதனுடைய உட்பொருள் இதுதான். வேலை செய்கின்ற நீ தானாக களைத்து கீழே படுத்துக் கொள்ளுகின்ற வரை தொடர்ந்து அற்புதமாய் வேலை செய்வது என்பதே மனிதனின் உயர்வான திறமை. இவ்விடத்தில் குறித்த காலம் என்ற பதத்தைப் போட்டு விளக்கத்தை சொல்லலாகாது.

ஞானச்சேரி ஞானிகள்
**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

# மகாவிஷ்ணு குருவாக அருள்புரிந்த ஸ்தலங்கள்

அபூர்வமாக சிற்சில தலங்களில் தான் மகா விஷ்ணு குருவாக எழுந்தருளி ஞானம் அளித் துள்ளார். அவைகளில்

1. திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் இங்கு கேசவசோமயாஜி என்னும் பக்தருக்கு குருவாக காட்சி கொடுத்து ஸ்ரீராமாநுஜர் என்ற பெயரில் நானே தங்களுக்கு மகனாக அவதரிப்பேன்" என்று அருளிய தலம்.
2. நாச்சியார் கோவில் இத்தல மூலவர் திருநறையூர் நம்பியே திருமங்கையாழ்வாருக்கு குருரூபமாக பஞ்ச சமஸ்காரங்கள் என்னும் வைணவ நெறிகளை உபதேசித்தார்.
3. திருக்கோவிலூர் இத்தல இறைவன் உலகலந்த பெருமாள் பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் மற்றும் பேயாழ்வார் போன்றோர்க்கு ஞானம் அளித்து பேரின்பத்தில் ஆழ்த்தியுள்ளார்.
4. ஆழ்வார் திருநகரி இத்தலத்தில் பெருமாளே ஆதிகுருநாதராக வந்து நம்மாழ்வார் அவர்களுக்கு உபதேசித்தாராம். இத் தலத்தை நம்மாழ்வார் பாசுரங்களால் இறைவனை புகழ்ந்து மங்களாசாசனம் செய்து வைத்தாராம்.
5. திருவஹீந்திபுரம் இத்தல மூலவர் ஹயக்ரீவம் என்னும் குதிரை வடிவம் கொண்டு மது கைடப அசுரர்களை அழித்து, அவர்களால் கடலுக்கு அடியில் ஒளித்து வைத்திருந்த வேதங்களை மீட்டு மீண்டும் பிரம்மனிடமே அளித்தார். இவரை குருவாக தரிசித்த வேதாந்த தேசிகர் என்னும் நிகமாந்த தேசிகர் ஹயக்ரீவரின் பேரருளால் ஒப்பற்ற ஞானியாகத் திகழ்ந்தார். இதனாலேயே ஹயக்ரீவரை ஞானான்ந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகாக் ருதம் என்று போற்று கின்றனர்.

மேற்கண்ட இடங்களில் உள்ள பெருமாளை தரிசித்தால் குருவை தரிசித்த பலன்கிடைக்கும் என்பதால், குரு சம்பந்தப்பட்ட பலன் பெற விரும்பு பவர்கள் இத்தலப்பெருமாளை வணங்கலாம்.

ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# குருபெயர்ச்சியின்போது அவசியம் தரிசிக்கவேண்டிய குருஸ்தலங்கள்

நவகிரகங்களில் பூரண சுப பலம் பெற்றவர் குருபகவான். தேவர்களுக்கு குருவான இவரை பிரகஸ்பதி என்றும், வியாழ பகவான் என்றும் அழைப்பர். சிவ வழிபாடு நீங்கலாக, கிரக நிலைகளால் ஏற்படும் தீய விளைவுகளில் இருந்து விடுபட வேண்டி குரு பகவானை (வியாழன்) வழிபாடு செய்வதும் அவசியம். குருபெயர்ச்சி நாளில் அவசியம் தரிசிக்கவேண்டிய குருஸ்தலங் கள் பற்றி பார்ப்போம்.

ஜாதகத்தில் குரு தோஷம் இருப்பவர்கள், குருபகவானுக்கு உரிய பரிகாரங்களைச் செய்து வழிபட்டால், வாழ்வில் சுபிட்சம் உண்டாகும். அப்படிப்பட்ட குரு ஸ்தலங்கள் பற்றி இங்கே பார்ப்போம்.

## குரு வீற்றிருந்த குருவித்துறை! குரு பகவான்

மதுரை மாவட்டம் சோழவந்தான் அருகே அமைந்துள்ளது குருவித்துறை. குருவின் பெயராலேயே அமைந்த தலம்; குரு பகவான் திருமாலின் அருள்பெற்ற தலம் இது. குரு வீற்றிருந்த துறை என்பதால், குருவிருந்த துறை என்ற பெயர் ஏற்பட்டு, அந்தப் பெயரே குருவித்துறை என்று ஊர்ப் பெயராக வழங்குகிறது.

## பதவி உயர்வு தரும் திட்டை குரு பகவான்!

தஞ்சாவூர் அருகே அமைந்துள்ள திட்டை திருக்கோயிலில் அருள்பாலிக்கிறார் குரு பகவான். தேவகுருவான பிரகஸ்பதி, கிரகங்களில் ஒருவராக பதவி உயர்வு பெற்ற தலம் திட்டை. இவரை வழிபட்டால் பதவி உயர்வு கிடைக்கும் என்பது நம்பிக்கை.

## ராஜ யோக அருளும் திருவேங்கைவாசல்! குரு பகவான்

புதுக்கோட்டை கீரனூர் சாலையில், அமைந்துள்ளது இந்தத் திருத்தலம். திருவேங்கைவாசலில் உள்ளஇறைவன் புலியாக வந்து, காமதேனுவின் சாபம் நீங்கப் பெற்றதால் இறைவனின் திருநாமம் ஸ்ரீவியாக்ரபுரீஸ்வரர். இந்த தலத்தில் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி அபய வர ஹஸ்தங்களுடன், ஒரு கரத்தில் ருத்திராட்சமும் மற்றொரு கரத்தில் சர்ப்பமும் ஏந்தி காட்சி தருகிறார். இங்கு வந்து தட்சிணாமூர்த்தியை வழிபட்டால், குழந்தைகளின் ஞாபக சக்தி பெருகும்; தொழில் விருத்தியாகும் என்பது நம்பிக்கை.

## ஸ்ரீ சிவயோக ஹரி குரு அருளும் திருவையாறு! குரு பகவான்

மகாவிஷ்ணுவுக்குக் குருவாக இருந்து ஸ்ரீ தட்சிணாமூர்த்தி வேதங்களை உபதேசித்த ஒப்பற்ற திருத்தலம், திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீஸ்வரர் திருக்கோயில். திருவீழிமிழலையில் கண்மலரிட்டு வழிபட்டு சக்கராயுதம் பெற்ற திருமால், வேதங்களின் பெருமைகளை உணர்ந்து, இந்தத் தலத்துக்கு வந்து ஸ்ரீ தட்சிணாமூர்த்தியிடம் உபதேசம் பெற்றாராம். இங்கு வந்து ஸ்ரீதட்சிணாமூர்த்திக்கு நெய் தீபம் ஏற்றி வழிபட்டால், சகல தோஷங்களும் நீங்கி சந்தோஷம் பெருகுவதாக பக்தர்கள் நம்பிக்கையுடன் சொல்கிறார்கள்.






# சிறப்பு வாய்ந்த திருவாசகம்

திருவாசகத்தில் பல்வேறு சிறப்புகள் இருந் தாலும், திருவாசகம் முழுவதுமே சிறப்பாகவே பார்க்கப்படுகிறது. அவற்றில் ஒருசில முக்கிய சிறப்புகளைப் பார்ப்போம்.

சிறப்பு–1: நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்தில் திருவாசகத்தின் முதல் பதிகமான சிவபுராணம் தொடங்குவது.

சிறப்பு–2: சிவபுராணத்தின் முதல் 6 வரிகள் வாழ்க என முடியும்.

சிறப்பு–3: அதை அடுத்த 5 வரிகள் வெல்க என முடியும்.

சிறப்பு–4: அடுத்த 8 வரிகள் போற்றி என முடியும்.

இவ்வாறு 658 என அமைந்திருப்பது திருவா சகத்தின் 658 பாடல்களை குறிக்கிறது.

சிவபுராணத்தின் 32 வது வரியில் மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் என பாடி இருப்பார்.

இது மாணிக்கவாசகர் 32 வயதில் முக்தி அடைந்ததை சூட்சமமாக குறிக்கும்.

திருவாசகத்தின் 18 வது வரியான அவன் அருளாலே அவன் தாள் வணங்கி என்பது படிப் பவர் அனைவரையும் உருக்குவதாக இருக்கும்.

ரமண மகிஷி, திருவண்ணாமலையில் தமது தாயார் உடல் நலமின்றி இருந்த கடைசி நாளில் அன்னை அருகே அமர்ந்து தொடர்ந்து திரு வாசகம் படித்தார். அன்று இரவே அவரது அன்னை முக்தி அடைந்தார்.

காஞ்சி மகா பெரியவரிடம் குழந்தை இல்லாத ஒரு தம்பதி சென்று தங்கள் குறையை கூறினர். பெரியவர் திருவாசகப் புத்தகத்தை கொடுத்து ஒரு குறிப்பிட்ட பதிகத்தை தினம் படிக்க சொன்னார்.அவர்களுக்கு வரிசையாக 6 குழந்தைகள் பிறந்தன.

இறந்த வீட்டில் கட்டாயம் சிவபுராணம் படிக்க வேண்டும். "புல்லாகி, பூடாகி, புழுவாய், மரமாகி, பல் விருகமாகி, பறவையாய் , பாம்பாகி , கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய்" என சுவை நிறைந்த திருவாசகத்தின் பெருமைகளை சொல்லிக் கொண்டே போகலாம்.

● ஆன்மிகம் ● தத்துவம் ● உடல்நலம் ● பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் எந்தவித கட்டணமின்றி முற்றிலும் இலவசமாக படிக்க aanmeegamalar.com இணையதளத்தை பார்க்கவும்






















# அகப்பேய் சித்தர் தினமும் அரூபமாக வழிபடும் சிவஸ்தலம்

# கால சர்ப்ப தோஷம் போக்கும் ஈசன்

# தச்சூர் ஸ்ரீபிச்சீஸ்வரர்

உலகில் பிறக்கும் ஒவ்வொரு உயிருக்கும் தனது பாவ கர்மாவில் இருந்து விடுதலை கிடைக்க சிறந்த உபாயம் சிவலிங்க பூஜை ஒன்றே, உலக உயிர்கள் மட்டுமல்லாது தேவாதி தேவர்களும் இந்த உபாயத்தை பின்பற்றிதான் தனது பாவங்களில் இருந்து விமோசனம் பெற்றுள்ளனர்.

அப்படிப்பட்ட பாபலிமோசனத் தலமாக திகழ்கிறது தச்சூரில் அமைந்துள்ள ஸ்ரீபிச்சீஸ்வரர் ஆலயம். இந்த பூமியை அளந்தன், வாக்கி, தக்ஷகள், கார்கோடகன், சங்கபாலன், குளிகள், பத்மன் மற்றும் மகாபதமன் ஆகிய எட்டு நாகங்கள் தாங்கிக் கொண்டிருக்கின்றன. இவர்களே அனைத்து நாகங்களுக்கும் இராஜாக்கள் ஆவர்.

இந்த எட்டு நாக ராஜாக்களும் வலிமை தலைமைப்பதவி தீர்க்காயுள் போன்ற வரங்கள் வேண்டி, இப்பூவுலகில் பல்வேறு இடங்களில் சிவபூஜை செய்துள்ளனர். ஆனால் தனது இனத்த வர்கள் மனிதர்களுக்கும், மற்ற உயிர்களுக்கும் செய்த பாவங்களுக்காக விமோசனம் வேண்டி உலகில் இத்தலத்தில் மட்டுமே இவ்வெட்டு சர்ப்ப இராஜாக்களும் ஒன்றிணைந்து, சிவலிங்க பூஜை புரிந்துள்ளனர்.

வாசனை மிருந்த முல்லை வகையைச் சேர்ந்த பிச்சி மரங்கள் நிறைந்த பிச்சி வனத்தினிடையே ஆதியில் சுயம்புவாகத் தோன்றிய ஸ்ரீ பிச்சிஸ்வரப் பெருமானை அனுதினமும் பிச்சி மலர்களால் ஆன்ம பூஜை புரிந்தனர்.

மகிழ்ந்த சிவபெருமாள் அவர்கள் முன் தோன்றி, சர்ப்பங்களின் அனேகக் கோடி பாவங்களையும் போக்கி, அவர்களுக்கென தனி உலகத்தையும் (நாகலோகம்!) அருள்செய்தார்.

அதன் நன்றிக்கடனாக இன்றும் பல நாகங்கள் இங்கு உலாவுவதை பலர் கண்டு பயபக்தியுடன் வணங்கியுள்ளனர். இன்றும் எட்டு நாகராஜர்கள் இங்கு சுயம்பு ஸ்ரீ பிச்சீஸ்வரரை வழிபடுவதாக நம்புகின்றனர் பக்தர்கள்.

சதா சிவனையே



www.aanmeegamalar.com






சிந்தித்துக் கொண்டிருக்கும் சித்த மகா புருஷர்களுல் ஒருவரான அகப்பேய் சித்தர் தினமும் அரூபமாக இத்தலத்திற்கு வந்து அரவங்கள் வழிபட்ட பிச்சிவள்நாதரை வழிபடுவதாக அகத்தியர் நாடி அடித்துக் கூறுகின்றது.

அகப்பேய் சித்தர் வழிபடும் சமயம் சில அபூர்வ நிகழ்வுகளும் இங்கு நடத்ததுண்டு. அவற்றை இந்த ஊர் மக்கள் கூறி சிலாகித்துக் கொள்கின்றனர்.

சோழர் காலத்திற்கு முன்பு இத்தல சிவ லிங்கம் புற்றால் மூடியிருந்ததாகவும், அதை பெயர்க்கும்போது சிவலிங்கத்தின் முடியில் கடப்பாரை பட்டு இரத்தம் வந்ததாகவும், பின் ஈச்சங்கிற்றுகளைக் கொண்டுதலைப் பகுதியில் நைத்ததாகவும் செவிவழிச் செய்தி ஒன்று கூறப்படுகிறது.

இதனால் ஆதியில் இவ்வூர் தைய லூர் என்றிருந்து, தற்போது தச்ஞர் ஆனது என்றும் கூறுகின்றனர்.

முதலாம் பராந்தகச் சோழன் எழுப்பிய சிவா லயம் முற்றிலும் சிதைந்து போக பின்னர் அவ்விடத்திலேயே ஆலயம் எழுப்பப்பட்டு, கும்பாபிஷேகம் நடத்தியுள்ளனர் ஊர் மக்கள்.


மோ.கணேஷ்

ஊரின் வடகிழக்கு திசையில் ஆலயம் அழகுற அமைத்துள்ளது. நான்கு பக்கமும் சுவர்கள் சூழ..

தென்புர வாயில் வழியாக உள்ளே நுழைகிறோம் இராஜகோபுரம் காணப்பெறவில்லை. உள்ளே முதலில் நிரூர்த்தி மூலையில் முழுமுதற் கடவுளின் சந்திதி அடுத்ததாக வள்ளி தெய்வாளை உடனான ஷன்முகர் சன்னதி கொண்டுள்ளார்.

மேற்குபுர மதிலொட்டிய தாழ்வாரத்தில் ஸ்ரீ வீரபத்திரர் எழில் வடிவாய் காட்சி தருகின்றார். அருகில் சர்ப்ப ராஜர் வீற்றருள்கின்றார், நடுமத்தியில் இறைவன் சன்னதி அமைந்துள்ளது. அழகிய சிற்பங்களுடன் கூடிய 21 தூண்கள் கொண்ட பிரம்மாண்டமான முன்மண்டபம். அவற்றின் பல இடங்களில் சர்ப்பங்களும், அகப்பேய் சித்தர் வடிவமும் வடிக்கப்பட்டுள்ளன.

பின்னர் ஸ்தபன மண்டபம், தொடர்ந்து அர்த்த மண்டபம் மற்றும் மூலஸ்தானம் கருவறையுள் சதுர ஆவுடையார் நடுவே சுயம்பு மூர்த்தமாகப் பேரருள் புரிகின்றார் ஸ்ரீ பிச்சீஸ்வரர்.

திருமுடியின் இடப்பக்கம் கடப்பாரையால் வெட்டுப்பட்ட தழும்பு பள்ளமாக உள்ளது சீரற்ற சொரசொரப்பான லிங்கத்திருமேனி




அபூர்வமான லிங்கம் தினந்தோறும் அகப்பேய் சித்தர் வழிபடும் மூர்த்தி அவ்வப்போது நாகங் களும் இவரை பூஜிக்கின்றன.

கருவறையுள் அதீத காந்த அலைகள் இருப்பதை உணர முடிகின்றது, உணர்ச்சி மிருந்த லிங்க தரிசனம் முடித்து ஆலய வலம் வருகையில் ஈசனின் வாமபாகத்தில் தனியே ஆலயம் கொண்டு அருள் புரிகின்றாள் அன்னை.

முகப்பு மண்டபம் கடந்தால், அந்தராளம் இங்கே நின்றபடி அன்னை ஸ்ரீ பிரகன்நாயகியின் எழில்மிகு தரிசனத்தைக் கண்டு பரவசம் அடைகிறோம். ஆலய வலத்தை முடிக்கையில், ஈசான திசையில் உள்ள நவக்கிரகங்களையும், ஸ்ரீ கால பைரவரையும் வணங்குகின்றோம். பின் பலிபீடத்தின் முன்னே சாஷ்டாங்கமாக விழுந்து, வணங்கி, நமஸ்கரிக்கின்றோம்.

எல்லா சிவாலய விஷயங்களும் இங்கு நடத்தப்படுகின்றன. மாத பிரதேசங்கள் மற்றும் பௌர்ணமி பூஜைகள் சிறப்புடன் அனு சரிக்கப்படுகின்றன. தலவிருக்ஷமாக பிச்சி மரமும், தீர்த்தமாக கார்கோடக தீர்த்தமும் உள்ளன.

சர்ப்ப சாபம், சர்ப்ப தோஷம் மற்றும் கால சர்ப்பு தோஷத்தால் துன்பப்படுபவர்கள் இங்கு சுவாமி அம்பாளுக்கு அபிஷேகம் நடத்தி. நீலநிற பட்டாடை அணிவித்து, முல்லை மலர்களால் அர்ச்சித்து, பால் பாயாசமும், அக்காரவடிசலும் நிவேதித்து வழிபட சிறந்த பலன்களைப் பெற்றிடலாம்.

அரசுக்குச் சொந்தமான இவ்வாலயத்தில் தினமும் ஒரு கால பூஜை மட்டும் நடைபெறுகின்றது. ஊரார் உதவியுடன் பகல்பொழுதில் எப்போது வேண்டுமானாலும் இங்கு ஆலய தரிசனம் செய்யலாம். எல்லாம் வல்ல ஸ்ரீ பிரகன்நாயகி அம்பாள் உடனுறை ஸ்ரீ பிச்சீஸ்வரரை வணங்கி, வழிபட்டு சகல பாபங்களிலிருந்தும் விடுபட்டு, வாழ்வில் வளம் பெறுவோம். திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியிலிருந்து தேவிகாபுரம் செல்லும் சாலையில் 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது தச்சூர்.

பழங்காமூர் மோ.கணேஷ்.
தொடர்பு எண்: 9789156179

# கடினமா உழைத்தும் பலன் இல்லையா?

## எளிய தாந்திரிக முறையில் பலன் பெறுங்கள்

இந்த பூமியில் வாழக்கூடிய மனிதர்களில் இரண்டு ரகம் உண்டு. ஒரு சிலர் எந்த முயற்சியையும் செய்யவே மாட்டார்கள். ஆனால் அவர்களுக்கு பட்டம் பதவி பெயர் புகழ் இவை அனைத்தும் தேடிவரும். அதிர்ஷ்ட காரர்களாக இருப்பார்கள். சாதரனமாக எந்த வேலையை அவர்கள் தொடங்கினாலும், அதன் மூலம் அவர்களுக்கு வெற்றி கிடைக்கும். இவர்களை யோகக்காரர்கள் என்று நாம் சொல்லுவோம்.

**மேற்கண்டவர்கள் ஒரு ரகம்.**

இன்னும் சில பேர் வாழ்க்கையில் கஷ்டப்பட்டு துன்பப்பட்டு துயரப்பட்டு நிறைய முயற்சிகளை மேற்கொள்வார்கள். ஆனால் அவர்களுக்கு வெற்றி என்பதே கிடைக்காது. காரணம் அவர்களுடைய வாழ்க்கையில் அதிர்ஷ்டம் என் பதே இருக்காது. யோகம் கெட்டவர்களாக இருப்பார்கள்.

**இவர்கள் இரண்டாவது ரகம்.**

அதிர்ஷ்டம் இல்லாதவர்களாக நீங்கள் இருந்தால், உங்களுடைய வாழ்க்கையில் நீங்கள் வெற்றியே இதுநாள் வரை கண்டதில்லை என்றால் உங்களுக்காக சொல்லப்பட்டுள்ள ஒரு சுலபமான பரிகாரம் தான் இது.

உங்களை பிடித்த கஷ்டங்கள் அனைத்தும் தீருவதற்கு நீங்கள் செய்யவேண்டிய தாந்திரிக ரீதியான ஒரு பரிகாரத்தை பற்றி நாம் தெரிந்து


www.aanmeegamalar.com

கொள்வோம்.

ஒருவருக்கு கெட்ட நேரம் தொடங்குகிறது என்றால் அது கால் பாதங்களின் வழியாகத்தான் தொடங்கும் என்று சொல்லுவார்கள்.

காலில் ஆரம்பித்த கெடுதல் படிப்படியாக உயர்ந்து நம்முடைய தலையில் ஏறி உட்கார்ந்து கொள்ளும். அதன்பின்பு நம்மை பிடித்து ஆட்டி படைக்கும். ஆக நமக்கு கால் பாதங்களின் மூலம் வரக்கூடிய துன்பங்களை, கால் பாதங் களில் இருந்து கழட்டி விட வேண்டும். இப்படி செய்தால், உங்கள் துரதிஷ்டம் உங்கள் கால் பாதங்களில் இருந்தே உங்களை விட்டு வெளியே சென்றுவிடும்.

கால் பாதங்களை சுத்தம் செய்ய நமக்கு தேவையான பொருட்கள் இரண்டு.

1. பசும் சாணம்
2. சாதம் வடித்த கஞ்சி

சாதம் வடித்த கஞ்சியில் கொஞ்சமாக பசும் சாணம் போட்டு நன்றாக கரைத்துக் கொள்ளுங்கள். தேவைப்பட்டால் கொஞ்சம் தண்ணீரையும் ஊற்றி கரைத்துக் கொள்ளலாம்.

இந்த கரைசலை உங்களுடைய காலில் ஊற்றி கழுவ வேண்டும். ஒரு கைப்பிடி அளவு பசும் சாணம் கிடைத்தால் கூட போதும்.

முடிந்தால் ஒரு அகலமான பக்கெட்டில் இந்தக் கரைசலை ஊற்றி உங்களுடைய கால் பாதங்களை ஐந்து நிமிடங்கள் இந்ரத கரைசலில் ஊறவைத்துக் கொள்ளவும்.

அதன் பின்பு சாதாரண தண்ணீரில் பாதங்களை கழுவி விட்டால் உங்களை பிடித்த பீடை அனைத்தும் உங்கள் பாதங்களின் வழியாக




வெளியே சென்று விடும், இந்த செயலை, தாந்திரிக தந்திரம் என்று சொல்வார்கள்.

நிறைய பேருக்கு தொழிலில் நஷ்டம். வருமானம் இருக்காது. கடன் பிரச்சனை, புதிய முயற்சிகளில் தோல்வி, திருமணம் நடக்காது. ஏதோ பிடித்த ஆட்டிப்படைக்கும். ஒன்றன்பின் ஒன்றாக பிரச்சினை வந்து கொண்டே இருக்கும்.

இப்படி கஷ்டங்கள் உங்களுக்கு இருந்தால் உங்களுடைய கால் பாதங்களில் தொடர்ந்து 27 நாட்கள் இந்த முறையை சோதித்து பாருங்கள். நிச்சயமாக உங்களை பிடித்த பீடை உங்களை விட்டு ஓடிவிடும். பிறகு எல்லாம் நன்மையே நடக்கும்.




# அமிர்தகடிகை நேரம்

கலியுகத்தில் காரிய சித்திக்கு துர்க்கை வழிபாடு அதுவும் இராகு காலத்தில்,செய்வது சிறந்தது. இராகு காலத்தில் கடைசி ½ மணி நேரமான அமிர்தகடிகை நேரமே சிறப்பான பரிகார நேரம். நெய்விளக்கு ஏற்றவும் உகந்த நேரம். ஞாயிற்றுகிழமை மாலை 4.30 முதல் 6.00 மணிக்குள் துர்க்கைக்கு விளக்கு ஏற்றி வழிபட நாம் வேண்டிய பிராத்தனைகள் நிறைவேறும்.






# ஆன்மிக உலகின் முதல் இலவச இணைய இதழ்

## இதுவரை வெளிவந்த அனைத்து இதழ்களையும் கட்டணமின்றி

aanmeegamalar.com
aanmeegamalr (app)–ல்
படித்து பயன்பெறலாம்

சத்தான நமது பாரம்பரிய உணவிற்கு முக்கியத்துவம் தருவோம், கபசுபகுடிநீர், அசுவகந்தி, தேன் குடிநீர், இஞ்சி, மிளகு, நிலவேம்பு, போன்றவற்றை அதிகம் எடுத்துக்கொண்டு

**கொரானாவை விரட்டுவோம்**

# ஆன்மீக வழியில் அமைதி

சகிப்புத்தன்மை, சகித்துக்கொள்ளுதல் போன்றவற்றை சிலர் தவறாகப்புரிந்து கொள்கிறார்கள். ஒருவருக்கு தலைவலி வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அந்தத் தலைவலி எவ்வளவு நேரம் இருக்குமோ இருந்து விட்டுப் போகட்டும் என்று இருக்கக்கூடாது. அதனை நீக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். இதிலிருந்து என்ன தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது என்றால் ஒரு கஷ்டம் துன்பம் துயரம் வந்து விட்டால் நம் சக்திக்கு தக்கவாறு அந்த துன்பத்தை நீக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மனிதர்களுக்கு வரும் துயரங்களைப் பொறுத்துக்கொண்டு சகித்துக்கொண்டு எவ்விதமான முயற்சியையும் மேற்கொள்ளாமல் சோம்பேறியாக வீட்டில் இருக்க வேண்டும் என்று சாஸ்திரங்கள், புராணங்கள் போன்றவை கூறவில்லை. அதேபோல் ஒரு கஷ்டம் வருகிறது என்றால் அதனை உனது சக்திக்கு ஏற்றவாறு தாங்கிக்கொண்டு, அதனை நீக்குவதற்கு முயற்சியை மேற்கொள்ளவேண்டும். அப்படி கடினமாக முயற்சி செய்தும் அந்தக் கஷ்டம் தீரவில்லை என்றால், மேற்கொண்டும் அந்தக் கஷ்டமோ துயரமோ தொடர்கிறது என்றால் இதுவும் கடந்துபோகும் என்று எண்ணி அதனை சகித்துக்கொள்ள வேண்டும் என்றுதான் சாஸ்திரங்கள் கூறுகிறது.

என்னதான் முயற்சி செய்தாலும் துன்பம் இருக்கும் அதனை சகித்துக் கொள்ளவேண்டும் என்ற பொருளில்தான் சாஸ்திரம் சகிப்புத்தன்மை பற்றி கூறுகிறது. எடுத்தக்காட்டாக உடல்நிலை சரியில்லை என்று மருத்துவரிடம் செல்கிறோம். அவர் மருந்து மாத்திரைகள் கொடுத்து மாத்திரைகளை சாப்பிட்டு வந்தால் ஒரே நாளில் சரியாகிவிடும் என்று கூறுகிறார் என்று வைத்துக் கொண்டால், அந்த ஒருநாள் வரையிலும் அந்த வலியை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும்.

அதேபோல் நமக்கு தீராத துயரங்கள் கஷ்டங்கள் வந்து விட்டால் நாம் சக்திக்குத் தக்கவாறு அவற்றை களைய முயற்சியை மேற்கொள்ள. வேண்டும், அவ்வாறு முயற்சி செய்தும் அந்தக் கஷ்டம் நீங்கவில்லையென்றால் நமது சக்தி மீறிய கஷ்டம் என்று நினைத்து அதனை சகித்துக் கொள்ளுதல் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். இதற்குப் பெயர்தான் சகிப்புத்தன்மை என்று ஆன்மிகம் கூறுகிறது.

இதனைத்தான் கிருஷ்ணபரமாத்மா அருச்சுனனுக்கு வெற்றி கிடைக்கும்வரை பொறுமையுடன் இருக்க வேண்டும் என்று கீதையில் இரண்டாவது அத்தியாயம் மூலம் உபதேசம் செய்கிறார். துன்பங்கள் வரும்போது அதனை நீக்குவதற்கு எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் இருப்பது சகிப்புத்தன்மை அல்ல. அதனை ஒரு சோம்பேறித்தனம் என்றுதான் கூறவேண்டும். முயற்சிக்குப் பிறகுதான் நாம் சகிப்புத்தன்மையை மேற்கொள்ள வேண்டும். எந்தவித முயற்சியும் செய்யாமல் இருந்து சகிப்புத்தன்மை மேற்கொள்வது சோம்பேறித்தனம் ஆகும். நமக்கு வரக்கூடிய கஷ்டத்தையும் முயற்சிக்குப் பிறகும் அந்தக் கஷ்டத்தை தவிர்க்க முடியவில்லை என்று தோன்றும்போது அதனை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு சகித்துக்கொள்ள வேண்டும் என்று சாஸ்திரம் கூறுகிறது.

எடுத்துக்காட்டாக ஒருவர் பக்கத்து வீட்டில் குடியிருப்பவருக்கு ஏதோ ஒருவிதத்தில் தேவையில்லாமல் துன்பத்தைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவரிடம் எவ்வளவு கூறியும் அவர் தன் குணத்தில் இருந்து செயல்பாடுகளிலிருந்து மாறவில்லை என்றால்,



அவர் ஒரு திருந்தாத ஜென்மம் என்று முடிவு செய்து நாம் அதனை சகித்துக்கொள்வதுதான் நல்ல பண்பாடு ஆகும். அப்படியில்லாமல் அவர் செய்யக்கூடிய துன்பங்களை பொறுத்துக்கொண்டு அவரிடம் எந்தவித எதிர்ப்பும் வெளிப்படையாக அவரிடம் எதையும் தெரிவிக்காமல் இருந்து கொண்டு, மனதில் அவரைப்பற்றி அவர் செய்த துன்பங்களை மனதளவில் முணுமுணுத்துக் கொண்டு இருப்பது, சகிப்புத்தன்மையும் அல்ல. அது ஒரு நல்ல பண்பாடும் அல்ல என்று சாஸ்திரங்கள் கூறுகிறது.

இதிலிருந்து என்ன புரிந்து கொள்ள வேண்டும் என்றால் ஒருவர் நமக்கு செய்யும் துன்பங்களை முழுமனதாக பொறுத்துக் கொள்ளவேண்டும். மேலும் அவர் கொடுக்கும் துயரங்களை பற்றி மனதில்கூட எண்ணாமல் அவரைப்பற்றி அவர் செயல்பாடுகளைப் பற்றி முற்றிலும் மறந்து இருப்பதுதான் சகிப்புத்தன்மை ஆகும். அதேபோல் மற்றவர்களிடம் அவரைப்பற்றி தரக்குறைவாக கூறிவிட்டு ‘இருந்தாலும் நான் அவர் எனக்குச் செய்த துன்பங்களையெல்லாம் பொறுத்துப்போகிறேன்’ என்று கூறுவதும் சகிப்புத்தன்மை அல்ல. அவரை மனப்பூர்வமாக மன்னித்து அவரையும் அவர் செய்த துன்பங்களையும் அப்போதே மறந்து விட வேண்டும். அவ்வாறு அவர் நமக்கு செய்த துன்பங்களை மனத் துயரங்களை பற்றி நாம் மறந்து விடாமல் இருந்தால் மனதளவில் துன்பப்பட்டுக்கொண்டு இருப்போம். அதனால் நாம் மன அமைதியை இழக்க நேரிடும்.

சிலபேர் நம்மிடம் கூறுவார்கள் மன ஆற்றமையில்தான் மற்றவர்களிடம் அவரைப்பற்றி குறைகூறி புலம்புகிறேன் என்று கூறுவதும் சரியல்ல. மற்றவர்கள் மீது மனதில் வெறுப்பு உணர்வு எதுவும் இல்லாமல் இருக்கும் செயல்தான் சகிப்புத்தன்மை என்று சாஸ்திரம் கூறுகிறது. மனதைக் கட்டுபடுத்தி அவரிடம் எந்தவித வெறுப்பும் காட்டாமல் முழுமனதாக பொறுத்துக் கொள்ளுதல் என்பதுதான் சகிப்புத் தன்மை எனப்படும். அந்த நபரை விரும்பவும் வேண்டாம் வெறுக்கவும் வேண்டாம். மனதில் அந்த நபரை நினைத்து மனதிற்குள் புழுங்கி முணுமுணுக்காமல் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

முழுமனதாக மன்னித்து பொறுமையுடன் அவரை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். இன்னாசெய்தாருக்கும் இனியவை செய்தல், மன்னித்து ஏற்றுக்கொள்ளுதல் அன்பு காட்டுவது போன்றவற்றை கடைபிடிக்க வேண்டும் என்று புராணங்கள் சாஸ்திரங்கள் விளக்கிக் கூறுகிறது. திருவள்ளுவர்

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்,
நாண நன்னயம் செய்து விடல்"

என்று பொறுத்துக் கொள்வதைப் பற்றி திருக்குறளில் எளிமையாக விளக்கியுள்ளார்.

நாம் வாழ்க்கையில் வெற்றி அடைய வேண்டும் என்றால் கோபப்படாமல் எதையும் பொறுத்து சகிப்புத்தன்மையுடன் இருக்க வேண்டும். ஒருவர் வெற்றி அடைந்து இருக்கிறார் என்றால் அவர் எதோ ஒரு இடத்தில் அவரையும் அறியாமல் மற்றவர்களிடம் கோபப்படாமல் மனதளவில் சகிப்புத்தன்மையுடன் இருந்திருப்பார். எனவே அவர் வாழ்க்கையில் வெற்றி அடைந்து இருப்பார். நமது உயர்வுக்கு முக்கிய பண்பு பொறுமை சகிப்புத்தன்மைதான் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

எடுத்துக்காட்டாக இராமாயண காவியத்தில் ஒரு காட்சி. இராவணன் படைகளையெல்லாம் இழந்து, தன்னிடமுள்ள போர் ஆயுதங்களை எல்லாம் இழந்து நிராயுதபாணியாக போர்க்களத்தில் நின்றுகொண்டு இருந்தான். அப்போது இராமன் நினைத்திருந்தால் அவனை ஒரே அம்பில் வீழ்த்தியிருக்கலாம். ஆனால் இராமன் அவ்வாறு அவனை வீழ்த்துவதற்கு நினைக்கவில்லை. இராமன் தன்னோட மனைவி சீதாபிராட்டியை இராவணன் கவர்ந்து சென்றவன் என்று தெரிந்திருந்தும், அவன் மீது கோபப்படவில்லை.

அதற்குமாறாக இராமன் அவனிடம் புன்னகையுடன் பொறுமையுடன் சகிப்புத்தன்மையுடன் “இராவணா அனைத்தையும் போர்க்களத்தில் இழந்து நீ என் முன்னால் நிற்கிறாய். அதனால் நீ இன்று போய் நாளை வா“ என்று கூறினான். இராவணன் மனம் திருந்தி சீதாபிராட்டியை இராமனிடம் ஒப்படைத்து இருந்தால் இராமபிரான் அவனை மன்னிக்கவும் தயாராக இருந்தான். இராவணன் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுப்பதுபோல் போர்க்களத்தில் ‘இன்றுபோய் நாளை வா’ என்று இராமபிரான் கூறினான். இது இராமபிரானின் பொறுமை என்னும் உயர்ந்த குணத்தை எடுத்துக் காட்டுகிறது. மனிதனுக்கு பொறுமை, சகிப்புத்தன்மை போன்றவை வேண்டும் என்பதை இராமாயணம் என்னும் இதிகாசம் இராமபிரானின் செயல்பாடுகள் மூலம் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

சில நேரங்களில் ஒரு காரியத்தில் செயலில் ஈடுபடும்போது தோல்வி அடைந்திருப்போம். ஏன் தோல்வி அடைந்தோம் என்பதை சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். நாம் அப்போது பொறுமையோ சகிப்புத்தன்மையோ இல்லாமல் இருந்திருப்போம் அல்லது நம்மையும் அறியாமல் உணர்ச்சி மிகுதியில் பொறுமையை இழந்திருப்போம். யாரிடமாவது கோபத்தில் பொறுமையில்லாமல் பேசி இருப்போம். அதனால் நாம் அந்த காரியத்தில் கிடைக்க வேண்டிய வெற்றியை இழந்திருப்போம். மற்றவர்கள் மீது காரணம் இல்லாமல் கோபப்படுவது நல்ல பண்பு அல்ல. கோபம் மனிதனை சிந்திக்கும் தன்மையை இழக்க வைத்து



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

மிருகத்தின் தன்மைக்கு கொண்டு சென்று விடும். மனிதன் புனிதனாக வேண்டும் என்றால் பொறுமை சகிப்புத்தன்மை போன்றவை வேண்டும் என்று ஆன்மீகம் கூறுகிறது.

நமக்கு வரக்கூடிய துன்பங்களை சகித்துக்கொள்ள வேண்டும் என்பது மட்டும் அல்ல. நமது வாழ்வில் அடையக்கூடிய மகிழ்ச்சி இன்பத்தையும் சகித்துக் கொள்ளவேண்டும் என்று ஆன்மிகம் கூறுகிறது. இன்பத்தில் என்ன சகிப்புத்தன்மை இருக்கிறது என்று நாம் நினைக்கலாம். இன்பத்திலும் சகிப்புத்தன்மை இருக்கிறது. ஒருவருக்கு எதிர்பாராத வெற்றி, பணம் பதவி, புகழ் கிடைக்கிறது என்று வைத்துக்கொள்வோம். அதன்பின் அவருடைய பேச்சு, செயல்பாடுகளில் அவரது நடவடிக்கைள் முற்றிலும் மாறி இருக்கும். இதுபோன்ற மனிதர்களை பெரும்பாலும் நாம் உலகில் சந்தித்து இருப்போம். அப்படிப்பட்ட மனிதர்களின் தலைகால் தெரியாமல் ஆடும் ஆட்டம் பாட்டம் எப்போது நிற்கும். அவர்கள் இயல்பு நிலைக்கு வருவார்கள் என்றால் அவர்களது வாழ்வில் ஒரு மிகப்பெரும் தோல்வியை அல்லது இழப்பை சந்திக்கும்போதுதான் பொறுமை பணிவு போன்ற குணங்கள் மீண்டும் அவர்களிடம் வரத்தொடங்கும்.

ஒருவருக்கு திடீரென்று பதவி உயர்ந்து முப்பாதாயிரம் சம்பளம் கிடைக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அவன் தனக்குக்கீழ் வேலைபார்க்கும் பணியாளர்களிடம் வரம்பு மீறி தன்னுடைய அதிகாரத்தை காட்டுவது கூடாது. அவ்வாறு அதிகாரத்தை காட்டுவதற்கு அவன் நினைத்தாலும் மனதை அதன் வழியே செல்லவிடாமல் மனதை கட்டுப்படுத்த வேண்டும். இதற்கு ஆன்மிகம் பலவழிகளில் துணை புரிகிறது. சத்சங்கத்தில் கலந்து கொண்டால் இனிமையான இயல்பான நல்ல பண்புகளை நாம் கடைபிடிப்பதற்குத் தோன்றும்.

வாழ்க்கையில் எதிர்பாராத வெற்றி வந்து விட்டால் அவை கல்வியில் பதவியில் புகழ் எது என்றாலும் மகிழ்ச்சியில் தன்னுடைய நிலையை எப்போதும் மறந்து விடக்கூடாது. சிலர் திடீர் பணக்காரராகி விட்டால் நெருங்கிய சொந்தங்களைகூட ஒரு அலட்சியப் பார்வையுடன் பார்ப்பார்கள். அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த இராத்திரியில் குடை பிடிப்பான் என்று பழமொழி கூறுவார்கள். நாம் உயர்ந்த நிலைக்கு வந்தவுடன் செயல்பாட்டில் கர்வத்துடன் நடந்து கொள்ளாமல் இயல்புநிலையில் அனைவரிடம் நடந்து கொள்ள வேண்டும். எதிர்பாராத வெற்றி வந்தாலும் பொருள். புகழ் , பதவி போன்றவை வந்தாலும் நாம் இயல்பு நிலையில் இருந்து நிதானமாக இருப்பதுதான் இன்பத்தில் சகிப்புத்தன்மை என்று சாஸ்திரம் கூறுகிறது.

சிலர் பணம் பதவி புகழ் போன்றவை கிடைப்பதற்கு முன்பு வரை நன்கு பேசி பழகியவர்களைகூட உறவுமுறை வைத்து அழைத்துப் பேசி மகிழ்வார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு எதிர்பாராமல் உயர்பதவி, பணம், புகழ் போன்றவை கிடைத்துவிட்டால், தன்னோட நெருங்கிய உறவுகளைக்கூட உறவு வைத்து அழைப்பதற்கு விரும்புவதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன்னோட வாழ்வில் ஏற்றத்திலும் இறக்கத்திலும் மனநிலையில் செயல்பாடுகளில் சமநிலையில் இருக்க வேண்டும் என்று ஆன்மிகம் வலியுறுத்திக் கூறுகிறது. அவ்வாறு நமது மனமும் செயலும் சமநிலையில் இருக்கும்போது நாம் தேடும் விரும்பும் அமைதி நம்மையும் அறியாமல் வந்து சேரும்.

வாழ்கையில் எதிர்பாராமல் வரக்கூடிய வெற்றி புகழ் போன்றவற்றை நிதானமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் அதாவது வெற்றி புகழ் இவற்றையும் சகித்துக்கொள்ள வேண்டும். வெற்றியிலும் புகழிலும் சகிப்புத்தன்மை அவசியம் என்று சாஸ்திரங்கள் கூறுகிறது. மனிதன் எந்தநிலையில் இருந்தாலும் சகிப்புத்தன்மையுடன் இருக்க வேண்டும் என்பதை சாஸ்திரங்கள் வலியுறுத்திக் கூறுகிறது. அவ்வாறு சகிப்புத்தன்மையுடன் இருக்கும்போது நமது மனம் பிறரை தாழ்வாக எண்ணவதில்லை அனைவர் மீது அனுபுடன் நடந்து கொள்வதற்கு தோன்றும்.

நாம் சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்வதற்கு ஆன்மீகவழியில் இதிகாசங்கள், புராணங்கள் வழி காட்டுகிறது. மனிதனுக்கு சகிப்புத்தன்மை, பொறுமையெல்லாம் தொடர்ந்து இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று அவன் சிந்தித்துப் பார்த்து செயல்படவேண்டும். இது நமது அறிவு, அனுபவங்கள் மூலம் வரவேண்டும். அதற்கு பொறுமையாக ஆன்மீக வழியில் தியானம், ஜபம் போன்ற பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஒரு கஷ்டம் வருகிறது என்றால் முயற்சி செய்தும் அந்தக் கஷ்டம் நம்மை விட்டு அகலவில்லை என்றால் அறிவுபூர்வமாக சிந்தித்து அந்தக் கஷ்டத்தின் தன்மை அறிந்து அதனை சகித்துக் கொள்வதற்கு பழக வேண்டும்.

சகிப்புத்தன்மைக்கு முதலில் பொறுமை இருக்க வேண்டும். கஷ்டமான சூழ்நிலையில் பொறுமையாக இருப்பதைத் தவிர வேறு ஒரு வழியும் இல்லை என்ற முடிவுடன் அந்த கஷ்டத்தை நாம் பொறுத்துக்கொண்டு அதை

ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவர் செய்த தவறுகளை பலமுறை சுட்டிக்காட்டியும் அவர் திருந்தவில்லையென்றால் அவர் ஒரு திருந்தாத ஜென்மம் என்று நாம் அறிவுபூர்மாக சிந்தித்து சகிப்புத்தன்மையை தவறாமல் கடைபிடிக்க வேண்டும். மேலும் நமது வெறுப்புத்தன்மையை அவரிடம் தொடர்ந்து காட்டிக்கொண்டிருந்தால், நமக்குதான் அவர் மூலம் நம்மையும் அறியாமல் மனதளவில் துன்பப்பட்டுக்கொண்டிருப்போம். இதனை நாம் அறிந்து பொறுமையுடன் இருப்பதற்கு பழகிக்கொள்ளவேண்டும். 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்று கூறுவதை நாம் கேட்டிருப்போம். இதனை ஆன்மீக வழியில் சிந்தித்துப் பார்த்தால் 'வாழ்வில் பொறுத்தார் மன அமைதி பெறுவார்கள்' என்று கூறலாம்.

உலகில் சிலபேர் ஒருவர் செய்த தவறுகளை தன்மையாகக் கண்டித்தும் கேட்கவில்லையானால், நாம் அவரிடம் பொறுமையுடன் நடந்து கொண்டால் அது கோழைத்தனம் என்று கூறுவார்கள். நாம் அவரை ஏதோ ஒருவிதத்தில் பழி வாங்கினால்தான் வீரம் என்று கூறுவார்கள். இதனையெல்லாம் நாம் பொருட்படுத்த வேண்டியதில்லை. இது நமது கோபத்தை தூண்டக்கூடிய தவறான சிந்தனை என்று புரிந்து கொள்ள வேண்டும். அறிவுபூர்வாக சிந்தித்து பொறுத்துப் கொள்ளுதல், ஏற்றுக்கொள்ளுதல் போன்றவை வீரத்தைவிட உயர்ந்த பண்பு என்று ஆன்மிகம் கூறுகிறது.

நமது கஷ்ட நிவர்த்திக்காக பரிகாரம் தேடுவதிலும் அறிவுபூர்வமாக நாம் செயல்படவேண்டும். சின்னக்கஷ்டதிற்கு பரிகாரம் என்ற பெயரில் அதாவது அந்த சின்னக்கஷ்டத்துக்கு நிவாரணம் செய்கிறேன் என்ற எண்ணத்தில் வேறு ஒரு பெரியகஷ்டத்தில் போய் நாம் மாட்டிக்கொள்ளக் கூடாது. எடுத்துக்காட்டாக வாடகை வீட்டில் குடியிருக்கும்போது வீட்டுச்சொந்தக்காரன் வந்து அவருடைய வீட்டினை பராமரித்து வருவதில் சில குற்றச்சாட்டுகளை நம்மிடம் கூறுகிறார் என்று வைத்துக் கொள்வோம். நாம் அவற்றைக் கேட்டுக்கொண்டு அவர் சொல்வதில் நியாயம் இல்லை என்றாலும் நாம் சகிப்புத்தன்மையுடன் இருந்து அவருக்கு ஏற்றபடி அவர் மனம் திருப்தியடையும்படி பொறுமையாக பதில் கூற வேண்டும்.

அதற்கு மாறாக அவரிடம் வீண்விவாதம் செய்து சண்டை போட்டுக்கொண்டு வேறுவழியில் தீர்வு காணுகிறோம் என்ற எண்ணத்தில், அந்த வீட்டைக் காலி செய்து விடுகிறோம் என்று வைத்துக் கொள்வோம். அதன்பிறகு வேறு ஒரு வாடகை வீட்டை அவசரமாக பார்த்து குடிபோய் விடுகிறோம். ஆனால் அந்த புதிய வாடகை வீட்டில் சரியாகத் தண்ணீர் வராமல், போக்குவரத்துக்கு வசதி இல்லாமல் இருப்பது போன்ற பெரிய கஷ்டத்தில் போய் மாட்டிக்கொள்வது அறிவுபூர்வமான செயல்கள் அல்ல. இதற்கு காரணம் நமது அறியாமையின் விளைவுதான் என்பதை புரிந்து கொள்ளவேண்டும். எனவே நாம் எந்தச்செயலையும் உணர்வுபூர்வமாக சிந்திக்காமல் அறிவுபூர்வமாக சிந்தித்து செயல்புரிய வேண்டும் என்று ஆன்மிகம் கூறுகிறது. நம் ஒரு கஷ்டம் எதிர்பாராமல் நமக்கு வந்து விட்டால், அந்தக் கஷ்டம் ஏன் வந்தது என்று சிந்தித்துப் பார்க்காமல் அவசரப்பட்டு முடிவு செய்வது அறிவுபூர்வமானதல்ல. சகிப்புத்தன்மை என்பது அறிவுபூர்வமானதாக இருக்க வேண்டும். ஆன்மீக வழியில் சிந்தித்து வரக்கூடிய சகிப்புத்தன்மை அறிவுபூர்வமாக இருக்கும். சூழ்நிலையறிந்து அறிவுபூர்வமாக சிந்தித்து நாம் சகித்துக்கொள்வதற்கு பழகவேண்டும் அதற்கு அறிவுபூர்வமான சிந்தனைகள் நம் உள்ளத்தில் வரவேண்டும். அதற்கு உயர்ந்த கருத்துகளைக் கூறும் ஆன்மீக நூல்களை தினமும் படித்து வரவேண்டும்.

உயர்ந்த கருத்துக்களை அடிக்கடி நம் மனதில் பதிவு செய்தால், நமக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும். மனதிற்கும் ஒரு ஆறுதல் அமைதியும் கிடைக்கும். ஆன்மீக அன்பர்களை அடிக்கடி சந்தித்து அவர்கள் மூலம் வரக்கூடிய அறிவுபூர்வமான கருத்துக்களை மனதில் பதிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அலைபாயும் மனதிற்கு ஆன்மிகம் ஒரு வடிகாலாக அப்போது செயல்படும், சத்சங்கத்தில் ஈடுபட்டு ஆன்மீக அன்பர்களின் அனுபவங்களைக் கேட்டுக்கொண்டு அதன்படி செயல்புரிய வேண்டும். அவ்வாறு செயல்புரியும்போது ஆன்மீகத்தில் முன்னேற்றம், குழப்பம் அடைந்த மனதிற்கு ஒரு நல்ல தீர்வு, மனஅமைதி போன்றவை கிடைக்கும்.

ஒரு செயலில் நாம் ஈடுபடும்போது சூழ்நிலையை அறிந்து செயல்படவேண்டும். சிலர் கஷ்டப்படும்போது அந்த கஷ்டத்திலிருந்து தற்சமயம் மீள்வதற்கு முடியாது என்று அவர்களுக்கு தெரிந்திருந்தபோதிலும் அந்தக் கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ள தாங்கிக்கொள்வதற்கு மனதில் தைரியம் இருக்காது. அதனால் அவர்கள் கஷ்டங்களிலிருந்து மீளவும் விலகவும் முடியாமல் மனத்துயரில் ஆழ்ந்து விடுவார்கள். அதனால் மன அமைதியையும் இழக்க நேரிடுகிறது.

இதற்குக் காரணம் என்னவென்றால் கடந்தகாலத்தில் நமக்கு சிறுசிறு கஷ்டங்கள் வரும்போது, நம்மையும் அறியாமல் அந்தக் கஷ்டங்கள் ஏதோ ஒருவிதத்தில் நம்மைவிட்டு அகன்றிருக்கும். அதேபோல் இந்தக் கஷ்டமும் அவ்வாறு தங்களை விட்டு அகன்றுவிடும் என்று நம்பிக்கையுடன் இருப்போம். அல்லது எதிர்ப்பார்ப்போம். இதற்கு நாம் அறிவுபூர்வமாக ஆன்மீக வழியில் சிந்தித்து பொறுமையாக எளிதில் தீர்க்கமுடியாத அந்தக் கஷ்டத்தை பொறுத்துக்கொள்ளவோ ஏற்றுக்கொள்ளவோ சகித்துக்கொள்ளவோ வேண்டும். இந்த இடத்தில்

கண்டிப்பாக நமக்கு சகிப்புத்தன்மை அவசி யம் வேண்டும். அவன் பசியே தெரியாமல் வளர்ந் திருக்கான். வசதியான வீட்டுப்பிள்ளைகள் அடிக்கடி ஏதாவது சாப்பிடுவதால், பசி என்றால் என்ன என்பதுகூட அவர்களுக்குத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பில்லை. சிலபேர் தாங்கள்பட்ட கஷ்டங்களை தங்கள் குழந்தைகள் படக்கூடாது என்று நினைப்பது தவறு இல்லை. ஆனால் அவர்கள் அளவுக்கு மீறி தங்கள் குழந்தைகளுக்கு செல்லம் கொடுத்து வளர்ப்பார்கள். இதனால் உங்கள் குழந்தைகளை சோம்பேறியாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். அவர்கள் எதிர்கால முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிறீர்கள் என்பதை யாரும் உணர்வதில்லை.

ஒரு காலத்தில் நீங்கள் கஷ்டப்பட்டு, அந்த கஷ்டத்தை நன்கு உணர்ந்து வளர்ந்ததால்தான், வாழ்வில் முன்னேற்றம் அடைந்தீர்கள். நீங்கள் கஷ்டத்தை உணர்ந்ததினால்தானே வாழ்க்கையில் முன்னுக்கு வந்தீர்கள். அதேபோல் உங்கள் குழந்தைகளும் ஓரளவு கஷ்டத்தை உணர்ந்தால்தான் அவர்கள் உங்களை விட முன்னேற்றம் காணமுடியும் என்பதை உணர்ந்து, உங்கள் குழந்தைகளை வளர்க்க வேண்டும். குழந்தைகளை வளர்க்கும் குடும்பச்சூழல்கூட உங்கள் மன அமைதியை கெடுப்பதற்கு வாய்ப்பு உண்டு.

நம்மிடம் வளரும் குழந்தைகள் கஷ்டங்களை உணரவேண்டும் அப்போதுதான் அவர்களும் எதிர்காலத்தில் வாழ்க்கையில் முன்னேற்றம் காணமுடியும். அளவுக்கு மீறி செல்லம் கொடுக்கக் கூடாது. அப்படிக் கொடுத்தால் உங்கள் குழந்தையின் முன்னேற்றத்தினை நீங்களே கெடுத்துக் கொண்டு இருக்கிறீர்கள் என்று அர்த்தம் ஆகும். எனவே குழந்தையிலிருந்து கஷ்டத்தை தாங்கிக்கொள்ளும் மனபக்குவம் குழந்தைக்கு வரவேண்டுமென்றால் அந்தக் குழந்தை கஷ்டப்பட்டால்தான் அதனை எப்படி சமாளிப்பது என்பது பற்றி குழந்தைக்கு இயல்பாக தெரிந்து கொள்வதற்கு முடியும்.

ஆன்மீக அன்பர்கள் பாதயாத்திரை, விரதம் தவம் போன்ற கடுமையான வலிகளை தாங்கிக்கொண்டு ஆனந்தத்துடன் செய்கிறார்கள். குழந்தைகள் விரும்பி ஆடி ஓடி விளையாடும்போது குழந்தைகளுக்கு உடல் வலி எதுவும் தெரிவ தில்லை. அதற்கு காரணம் அது விரும்பி வேக மாக ஓடி ஆடி விளையாடுவதால் அப்போது வலி எதுவும் தெரிவதில்லை. அதேபோல்தான் ஆன்மீக அன்பர்கள் பாத யாத்திரை விரதம், தவம் போன்றவற்றை விரும்பி மேற்கொள்வதால் அவர்களுக்கு எந்தவிதக் கஷ்டமும் மனதளவில் தெரிவதில்லை. இதிலிருந்து என்ன உணர்கிறோம் என்றால் எந்தவொரு செயலும் நாம் விருப்பப்பட்டு செய்யும்போது அதில் எந்தவிதக் கஷ்டமும் தெரிவதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. எந்தவொரு செயலையும் நாம் சந்தோச மாக விரும்பி செய்யும்போது அல்லது ஏற்றுக்கொள்ளும் போது மனதில் எவ்வித வலிகளோ கஷ்டமோ நமக்குதெரிவதில்லை. இதற்கு ஆன்மீக வழியில் பயிற்சியை தினமும் தவறாமல் செய்ய வேண்டும். சரியான ஞானம் என்பது பொறுமையாக அனைத்து துன்பங்களையும் எதிர்கொள்வதற்கு தயாராக வேண்டும். இதற்கு ஆன்மீக வழியில் தியானம் செய்வது ஒரு வழிமுறையாகும்.

கஷ்டத்தை உணராமல் இருக்க வசதியாக வாழக்கூடாது. கஷ்டத்தை தாங்கிக் கொள்ள சக்தி வேண்டும். முதியவர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்றால், கஷ்டங்களைத் தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி முதுமை அடைந்தவர்களுக்கு இல்லாமல் இருக்கிறது. வளரும் குழந்தைகளுக்கு அவ்வாறு இருப்பதில்லை. அவர்கள் விரும்பி ஆன்மீக சாதனைகளை பொறுமையாக செய்யும்போது பூரணமாக அவர்களால் செய்ய முடியும். சிலர் தியானம் போன்ற ஆன்மீக சாதனைகளை செய்யும் ஆர்வத்தில் ஆரம்பித்து விடுவார்கள். அதில் பொறுமையில்லாதவர்கள் சாதனைகளை இடை யில் விட்டுவிடுவார்கள். பொதுவாக தியானம் போன்ற ஆன்மீக பயிற்சிகள் ஆரம்பத்தில் சிறிது கஷ்டமாகத்தான் இருக்கும். தொடர்ந்து ஆன்மீக சாதனைகளை செய்து வரும்போது அதில் மன அமைதியைக் காணலாம்.

எடுத்துக்காட்டாக சிலர் கிணறு வெட்ட ஆரம்பித்து விடுவார்கள். குறிப்பிட்ட ஆழம் வரை வெட்டுவார்கள் தண்ணீர் வரவில்லை என்று பொறுமை இழந்து தோண்டுவதை விட்டு விடுவார்கள். அவர் பொறுமையுடன் இன்னும் ஐந்து அடிகள் தோண்டியிருந்தால் தண்ணீர் வந்து விடும். இதற்கு காரணம் பொறுமை இல்லாதுதான். சகிப்புத்தன்மை பொறுமையின் பலன் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால், நாம் எடுத்துக்கொண்ட காரியங்கள் மற்றும் சாதனைகளில் முழுமையாக வெற்றி பெறலாம் என்று இதிகாசங்கள் புராணங் கள் விளக்கிக் கூறுகிறது. பகவத்கீதை மூலம் அர்ச்சுனனுக்கு நீ பொறுமையாக சிந்தித்து செயல்புரிந்தால் வெற்றி அடைய முடியும் என்று பொறுமையைப்பற்றி எடுத்துக் கூறுகிறார். ஆன்மீக வழியில் நமக்கு பொறுமை சகிப்புத்தன்மை போன்றவை இருந்தால் நாம் விரும்பும் தேடும் மன அமைதியை பெறுவதற்கு முடியும்.

**எழுத்தாளர்பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd)
கைபேசி: 9894043308

**Owned, Published by CV.NATARAJAN. Design by SML.GRAPHICS, CHENNAI. Published from No.18, B.E. Colony, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : CV.NATARAJAN, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

மொபைலில்
ஆன்மிகமலரை
முழுவதும் படிக்க

Google Play Store
aanmeegamalar
டவுன்லோடு செய்து




நேரடி மற்றும் மறைமுக கட்டணங்கள் ஏதுமில்லை

Subscribe

MONEY

இதழ் முழுவதும்
இலவசமாக
படிக்கலாம்...

Google Play